



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –412



## மதவாத, இனவாத அரசியலை கையாளும் ஜனாதிபதி ரணில் – தமிழர் தரப்பு என்ன செய்கின்றது



## பூகோள அரசியலினால் முற்றுகையிடப்பட்டுள்ள இலங்கை



## இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியும், வீழ்ச்சியும்



# மதவாத,இனவாத அரசியலை கையாளும் ஜனாதிபதி ரணில் – தமிழர் தரப்பு என்ன செய்கின்றது



தமிழ் அரசியல் பரம்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன செய்கின்றது அல்லது என்ன செய்துகொண்டிருக்கின்றது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ள இந்த நிலையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய ஒவ்வொரு செயற்பாடும் அரசாங்கத்தின் நிகழ்சி நிரலிற்குள் சென்றுகொண்டிருப்பதாக பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார்கள். குறிப்பாக தமிழினத்தின் விடுதலைக்காக அரசியல் ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடிய கட்சிகளை உள்ளடக்கியதாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பிலே அங்கம் வகிக்கின்ற கட்சிகள் இருக்கின்றன. இருந்தும் அதற்குள்ளே மாறுபட்ட பிரச்சனைகளின் காரணமாக பிளவுகள் ஏற்பட்டு இன்று தமிழ் அரசியல் கட்சி தனியாக செயற்படுகின்ற ஒரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. தேர்தல் அதாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக பிளவடைந்த இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு மீளவும் ஒன்றிணைந்து தமது செயற்பாடுகள் உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறமாட்டாத தற்போதைய சூழ்நிலையிலேயே உள்ளூ ராட்சிமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருந்தும் அது தேவையற்ற ஒன்றாகவே தற்பொழுது செயலிழக்கப்பட்டிருக்கின்றது. காரணம் நிதி இல்லை என்னும் விடயத்தை முன்வைத்து அதிலே இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அதில் வெற்றி பெற்றிருக்கின்றார். அவருடைய அடுத்த இலக்கு ஒரு ஜனாதிபதி தேர்தலையோ அல்லது மாகாணசபைத் தேர்தலையோ நகர்த்திக்கொண்டு செல்ல வேண்டும் என்பது. ஆனாலும் திட்டமிட்டபடி செயலிழக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை என்ற ஒரு சொல் வடிவில் சில விடயங்களை மட்டும் கூறி வருகின்ற ரணில் விக்ரமசிங்க அவர்கள் தற்பொழுது அவர் தனது அரசியல் பலத்தை நிரூபிப்பதற்கு அல்லது ஐக்கிய தேசிய கட்சியை உயிர்ஊப்புவதற்க அவருடைய அரசியல் நகர்வுகள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருந்த போதிலும் வடகிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகம் இந்த தமிழ் மக்களுக்காக ஒரு அரசியல் ரீதியான தீர்வு திட்டத்தை கொண்டிருக்கவில்லை அல்லது அதற்கு வழங்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான இனப்படுகொலைக்கான தீர்வு இடம்பெறவில்லை போர் குற்றங்கள் விசாரிக்கப்படவில்லை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைகள் நிலுவையில் கிடக்கின்றன அதுமட்டுமல்லாது அபிவிருத்தி என்ற போர்வையிலே அவர்கள் தமக்கு தாமே சுரண்டுகின்ற நடவடிக்கைகள் இப்படி பல பிரச்சனைகள் தமிழ் தரப்பிலே இருக்கின்றன. அது மட்டுமன்றி காணி சுபீகரிப்பு இருக்கின்றது. நில ஆக்கிரமிப்பினை பௌத்த மயமாக்கல் போன்ற விடயங்களும் அங்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் ஒரு அதிகாரத்தை கையில் எடுத்து செயற்படக்கூடிய அல்லது வெறுமனே தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு குரலாக மட்டுமே இருக்கின்றதே தவிர செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற ஒரு அமைப்பாக அல்லது கட்சியாக தமிழ் மக்களுக்கு செயற்படவில்லை என்பதை தற்பொழுது யதார்த்த பூர்வமாக உணர முடிகின்றது. அல்லது இந்த அதிகாரங்களை செய்வதற்கு அரசாங்கம் அனுமதிப்பதில்லை என்ற ஒரு நிலைப்பாடும் இருக்கின்றது. ஏனென்றால் வடகிழக்கிலே சுயாதீனமாக செயற்பாடுகளை செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் அரசியல் தரப்பு சில விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றத்தினுடைய அனுமதியை எடுக்கின்றது. எனவே அதனூடாக தொல்பொருள் ஆராய்ச்சி என்ற விடயங்களை தடுக்கின்ற எவராக இருந்தாலும் உரிய நடவடிக்கைகளை செய்கின்றார்கள். யாழில் பண்ணைக்கு அருகாமையில் வைக்கப்பட்ட சிலை தொடர்பாக அதனை வைக்கக்கூடாது என்ற ஒரு தடை உத்தரவு இருக்கின்றது. எதற்காக அந்த தடை உத்தரவு எடுக்கப்பட்டது அல்லது இந்துக்கள் மீது இவர்கள் ஏற்படுத்துகின்ற ஒரு வெறித்தனமான நடவடிக்கையா? அல்லது இந்துக்களை அவமதிக்கின்ற நடவடிக்கையா? என்று கூட இருக்கின்றது. வெடுக்குநாறி மலை தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு அதனை சீர் செய்ய வேண்டும் அதற்குரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற தரப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏனைய கட்சிகளும் ஒன்றிணைந்து பாரிய போராட்டங்களை முன்னெடுத்தார்கள். ஆனால் திருக்கேதீஸ்வர வளைவு உடைக்கப்படுகின்ற பொழுது அதனை காணொளிகள் மூலம் யார் உடைக்கின்றார்கள் என்று கூட தெரிந்திருந்த வேளையிலும் அவர்கள் கைது செய்த மறுகணமே விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இச் சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்களிற்கு மேல் ஆகின்றது. திருக்கேதீஸ்வர வளைவு கட்டப்படவும் இல்லை அதற்கான அனுமதியும் இல்லை.

எனவே இதுவொரு ஓரவங்சகத் தனமான ஒரு அரசியல் நடவடிக்கையாகவே இதனை பார்க்க முடிகின்றது. எனவே இந்த ஓரவஞ்சகமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்ற அல்லது அதனை இல்லாது செய்கின்ற நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் தமிழர் தாயகப் பிரதேசங்கள் தொல் பொருள் ஆராய்ச்சியில் இருந்தும் மீட்கப்படுகின்ற சில இடங்கள் அடையாளப்படுத்துகின்ற பொழுது வனவிலாகா திணைக்களம் இது எங்களுக்குரிய நிலப்பரப்பு என்று கூறுகின்றது. எனவே அந்த இடங்களில் தமிழ் மக்கள் சென்று விவசாயம் செய்வதற்கு கூட வழிகள் இல்லாத நிலைமை தற்பொழுது தோற்றம்பெற்றுள்ளது. எனவே தமிழ் தரப்பு என்பது மக்கள் பிரதிநிதிகள் இந்த மக்கள் பிரதிநிதிகளை பொறுத்தவரையில் அவர்கள் சுயாதீனமாக செயற்படுத்தப்படுவதற்கு என்ன தடையாக இருக்கின்றது. என்பதனை கண்டறிந்து அவர்கள் செயற்பட வேண்டும். இன்று ரெலோ கட்சி இருக்கின்றது. புளொட் இருக்கின்றது. ஈபிடீபி இருக்கின்றது. ஈபிஆர்எல்எப் இருக்கின்றது. பிள்ளையான் வியாழேந்திரன் அங்கஜன் போன்ற தமிழ் பேசுகின்ற அரசியல் தலைமைகள் இருக்கின்றார்கள். தமிழ் பிரதிநிதிகளாக இவர்கள் இருக்கின்றார்கள். இதில் ஒரு சிலர் அரசாங்கத்திற்கு ஒத்து ஊதுகின்ற செயற்பாடுகளை செயற்படுத்துவதனால் அடுத்த அடுத்த கட்ட நகர்வுகளை கொண்டு செல்ல முடியாத ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிர்ப்பு தடைச்சட்டம் என்ற ஒன்றை தற்பொழுது அவர்கள் கொண்டுவர இருக்கின்றார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட பொழுதும் அதனை நிறைவேற்றுவேன் என்றவொரு இறுமாப்புடன் இந்த நாட்டின் ஜனாதிபதி இருக்கின்றார். அவர் சமாதான காலகட்டங்களிலே தமிழீழ விடுதலைப்புலிகளை எவ்வாறு பிளவுபடுத்துவது என்றவொரு நிலைப்பாட்டை கொண்டிருந்து கட்சிதமாக கருணா பிரபாகரன் பிளவுக்கு வித்திட்டவர் தான் ரணில் விக்ரமசிங்க. எனவே இந்த நாட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடைய செயற்பாடுகள் என்பது அவர் இராஜதந்திர ரீதியிலே நகர்த்துவதாக கூறி தமிழ் மக்களது போராட்ட சிந்தனைகளில் இருந்தும் தமிழ் மக்களுடைய வடகிழக்கிணைந்த தாயக கனவில் இருந்தும் சிதைவடையச் செய்வதற்காக ஒவ்வொரு நகர்வுகளும் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையிலே அவர் தன்னுடைய அரசியல் ஆசனத்தை கடந்த 40 வருட காலங்களாக தக்க வைப்பதற்கும் அதனை முற்கொண்டு செல்வதற்குமாக செயற்பட்டவர். அது மட்டுமன்றி மேற்குலக நாடுகளின் செல்வாக்கை அவ்வப்போது பயன்படுத்திக்கொண்டு தனக்கு வருகின்ற பிரச்சனைகளை சமாளித்துக்கொண்டு அரசியலின் ஒரு அங்கமாக திகழ்ந்து அரசியலிலே சில புதுமைகளை நிகழ்த்த வேண்டும் என்று மாத்திரம் சிந்திக்கின்றாரே தவிர அவர் தமிழ் மக்களது பிரச்சனைகளில் அதற்கான தீர்வை கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு அல்ல. நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில். மைத்திரிபால சிறிசேன இருந்த காலகட்டத்தில் இனப்படுகொலைக்கான ஒரு தீர்மானம் சர்வதேச நாடுகளிலே அதாவது ஐக்கிய நாடுகள் சபையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதாக இருந்த காலகட்டத்திலே இங்கு எதிர்க்கட்சி பதவியை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்கி இந்த நாட்டிலே அவர்கள் எதிர்கட்சியாக இருக்கின்றார்கள். அவர்கள் எதிர்கட்சி தான் ஒரு காலகட்டத்தில் ஆளுங்கட்சி. எனவே தமிழ் மக்களுக்கு எந்த பிரச்சனைகளும் இல்லை. இந்த நாட்டிலே ஒரு தமிழ் தரப்பு எதிர்க்கட்சியாக இருந்தமை ஒரு வரலாறாக இருக்கின்றது என்பதனை காட்டி அதனை இரண்டு வருட கால அவகாசத்திற்குள் அதை மழுங்கடிக்கச்செய்தார். எனவே இப்படி தமிழ் தரப்பு தொடர்ந்தும் அரசாங்கத்தின் பால் ஒவ்வொரு நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் வருகின்ற பொழுது நாங்கள் கதைத்திருக்கின்றோம் தொடர்ந்தும் பேசுவோம். அது தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கத்திடம் காலக்கெடுவை கேட்டிருக்கின்றோம் அதற்கான தீர்வை வழங்கா விட்டால் நாங்கள் போராட்ட களத்தில் இறங்குவோம். என்று கூறி போராட்ட களத்திலும் இறங்குகின்றார்கள். ஆனால் அதற்கான முடிவு தான் இதுவரையிலும் வரவில்லை. தமிழ் மக்கள் தொடர்பான தீர்வு திட்டம் விடயத்திலே பல எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. எமது பிரதேசங்களிலே பௌத்த மயமாக்கலுக்காக சுரண்டப்படுகின்ற இந்த காணிகள் முற்றாக விடுவிக்கப்பட வேண்டும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சிலைகள் வடகிழக்கில் இருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் அவர்கள் மதவாத திணிப்பை இந்த நாட்டிற்குள் ஏற்படுத்துகின்றார்கள். அங்கங்கே புத்தர் சிலைகளை இரவோடு இரவாக வைத்துவிட்டு பௌத்த பிரான் இருந்தார் என்ற ஒரு விடயத்தை கூறி அதை தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் அந்த இடத்திற்கு செல்லக் கூடாது என்று நீதி மன்றத்திலே தடை உத்தரவினை வாக்குகின்ற நூதகமான முறையிலான ஒரு விடயம் தற்பொழுது நடந்து வருகின்றது. இதற்கிடையில் கிறிஸ்தவம் இந்து பிளவுகளை ஏற்படுத்துகின்ற திசை திருப்புவதற்காக சகதிகளை அரசாங்கம் ஏற்படுத்துகின்றது. எனவே தமிழ் மக்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணாத வகையிலே இந்த தமிழ் தரப்புகளை ஓரங்கட்டுகின்ற ஒரு செயற்பாட்டை தற்பொழுது அரசாங்கம் முன்னெடுக்கின்றது. ஏனென்றால் இவர்களால் உங்களுக்கு ஒன்றும் செய்து தர முடியாது.

ஆகவே நீங்கள் அரசாங்க தரப்புடன் பேசித்தான் செய்ய வேண்டும் என்றவொரு நிலைப்பாட்டை கொண்டு வருவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பில் சொல்லுவதை அரசாங்கம் செய்யாது செயற்படுகின்றது. அல்லது அதை அவர்கள் கூறியும் அது தமக்கு தெரியாது என்ற வகையிலே அவர்கள் அதனை முன்னெடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். ஒரு புறத்திலே சர்வதேச ரீதியாக தாங்கள் தமிழ் தரப்புடன் பேசுகின்றோம் தமிழ் தரப்பிற்கு ஆதரவு வழங்குகின்றோம் என காட்டிக்கொண்டிருக்கின்ற இந்த இலங்கை அரசு தொடர்ந்தும் வருகின்ற இந்த பிரச்சனைகளை எப்படி நூதகமாக கையாண்டு இவர்களை அரசியல் அரங்கிலிருந்து ஓரங்கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தியை கையாளுகின்றது. 22 பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பை இன்று சின்னாபின்னமாக உடைத்து ஒரு குறுகிய வட்டத்திற்குள் தமிழரசுக் கட்சி ஓரிரு ஆசனங்களையும் ஏனைய கட்சிகள் இரண்டு மூன்று ஆசனங்களையும் பெறுகின்ற நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்பொழுது சிதைக்கப்பட்டிருக்கின்றது என்பது தான் இன்றைய யதார்த்தம். எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பு மீளவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**நெற்றிப்பொறியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் மக்களின் தீர்வு திட்டம் என்னவாகப்போகின்றது?

இன்றைய நடைமுறை அரசியலை பொறுத்தவரையில் சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் இலங்கை மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையினுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது மட்டுமல்லாது அதிலிருந்து மீள்ச்சி பெறுவதற்கு சர்வதேச நாடுகளிடமும் சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன்களை பெற்று நாட்டை கொண்டு செல்ல வேண்டிய நிலைமையே தற்பொழுது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் குறித்த இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட 52 நாடுகளின் உதவியோடு முற்றுகைக்கு கொண்டு வரப்பட்டது. காரணம் என்னவென்றால் இந்தியாவிலும் தமிழ் நாடு தனியாக பரித்தாளப்படும் என்பதும் கூடவே.

இது இவ்வாறிருக்கும் நிலையில் தான் பூகோள சர்வதேச ரீதியாக இலங்கையினுடைய அரசியல் இது வரை காலமும் கையாளப்பட்டு வந்தது தற்பொழுதும் கையாளப்பட்டு வருகின்றது. தமிழ் தரப்பு இதற்காக மாற்று வழிகளை கையாளுகின்றதா? என்றால் அதுவும் இல்லை. ஒரு பிரச்சனையை உருவாக்கி மறுபக்கத்தில் அதற்கான ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்துகின்றது. கவனம் குறித்த ஆர்ப்பாட்டங்களிலே செலுத்தப்படுவதனால் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டங்களை முன்னெடுக்கும் விடயங்கள் தாமதப்படுத்தப்படுகின்றன. தற்பொழுது இலங்கை அரசியலில் ஒரு புதிய தந்திரோபாயமாக மதவாத, இனவாத, சாதிவாத அரசியலை மேற்கொண்டு வருகின்றது. ஒரு நாட்டில் மதவாத பிரச்சனையை தூண்டுவதன் மூலம் அந்த நாட்டுக்குள் இலகுவாக கலவரங்களை முடக்கிவிட முடியும் என்பது யதார்த்தம். அத்தகைய செயற்பாட்டையே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கையாண்டு வருகின்றார்.

தற்பொழுது பௌத்த விகாரைகளை நிறுவுதல், தமிழர் தாயக பகுதிகளில் இருக்கின்ற அடையாளங்களை அழித்தல், காணி சுவீகரிப்பு போன்ற பல்வேறுதரப்பட்ட ஆக்கிரமிப்புக்களும் இடம்பெற்று வருகின்றது. அரசியலின் கால நீரோட்டத்திற்கேற்ப செயற்பாடுகளை செய்வதன் ஊடாகவே மாற்றங்களை கொண்டு வர முடியும். வடகிழக்கு அரசியல் என்பது தீர்க்கப்படாத ஒரு பிரச்சனையாகவே காணப்படுகின்றது. தமிழர் தாயகம் என்ற நிலைப்பாடு மாற்றப்பட்டு ஒரே நாட்டுக்குள் தீர்வு என்ற விடயங்கள் கையாளப்படுகின்றது. அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுதெல்லாம் அரசாங்கம் தன்னை சர்வதேச வெளியில் இருந்து தன்னை காப்பாற்றுவதற்கு அணுகுமுறைகளை மேற்கொள்ளுகின்றது. குறித்த அணுகுமுறைகளின் ஊடாக சர்வதேச ரீதியில் அரசாங்கம் பலவற்றையும் சாதித்துள்ளது. குறிப்பாக தமிழர் தரப்பிற்கு எதிர் கட்சி பதவியை வழங்கியதன் ஊடாக நல்லாட்சி அரசாங்கம் இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலில் இருந்து தப்பிக்கொண்டது மீளவும் அதனை போர்க்குற்றம் என்ற ரீதியில் தமிழினத்திற்கு நிகழ்த்தப்பட்ட கொலைகள் விசாரிக்கப்பட வேண்டும் என சர்வதேசம் அழுத்தம் கொடுத்துள்ளது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனையை மீள் செய்வதற்கு அரசாங்கம் சர்வதேச ரீதியில் அணுகுமுறையை செயற்படுத்துகின்றதே தவிர தமிழர் பிரச்சனைக்காக செயற்படவில்லை என்பது நிரூபனமாகின்றது. அதனையும் தாண்டில் அரசியலில் தலைமைத்துவ பிரச்சனையும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. நலிவடைந்து சரிவடைந்த கட்சி அரசியலை மீளவும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் அவர்கள் முனைப்புடன் செயற்படுகின்றார். உள்ளூராட்சிமன்ற தேர்தலை அறிவித்த பின்னரும் அதனை நடக்கவிடாது மாற்று வழிகளை கையாண்டு நேரடியாக ஜனாதிபதி தேர்தலை நோக்கிய நகர்வுகளே நகர்த்தப்படுவதாக அறிய முடிகின்றது. எனவே தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் நோக்கில் தமிழர் தரப்பு தமது வெளிப்படையான அரசியலை மக்கள் முன் வைத்து அதனை கொண்டு செல்ல வேண்டும்.



## கல்லறைப் பூக்கள்

**பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்**

"அம்மா, உறவுகள் எல்லாம் எங்க போயிட்டாங்க" என்று கனகர் தனது மனத்தில் தோன்றிய சந்தேகத்தைக் கேட்டார்.

"வன்னியில் நடந்த சண்டையில் பல உயிர்கள் பலியாகியன. அதுல காணாமல் போனதுதான் இவளுடைய உறவுகள். இவன் எங்கட ஊர் எழுத்தாளன் யுத்தத்தில் நடந்த அப்பாவி மக்களின் அவலங்களைப் பல சிறுகதைகளில் தத்துவரூபமாக உண்மையான நிலையைக் காட்டயுள்ளான். எனக்கிட்ட அந்த சிறுகதைகள் வீட்டில் கிடக்கு, நுப்பத்தொன்றுக்கு வீட்டுக்கு வரேக்க கொண்டுவாறன் படிச்சிட்டுத் தாங்க. எங்கட மக்கள் சொத்து இழப்புக்களையும் மரண ஓலங்களையும் அடுத்தடுத்துதுப் பாத்துக் களைச்சுப் போனாங்க. கடைசியில் இயற்கையும் எங்கள விட்டு வைக்கவில்லை. இயற்கை தந்த பாடம் மனிதர்களுக்கு ஏராளம்" என்று தங்கராசர் தட்டுத்தடுமாறிக் கூறிக்கொண்டிருக்கும் போது,

படலையில் மாலதியின் பூதவுடல் அந்தியகாலை வாகனத்தின் உள்ளேயிருந்து நான்கு ஆடவர்களால் இறக்கப்பட்டது. 'காஷ்ட்' கூட்டம் விளையாடிக்கொண்டிருந்தவர்களும் தாயக்கட்டை விளையாடிக்கொண்டிருந்தவர்கரும் திடீரென எழுந்து படலைப்பக்கம் ஓடினார்கள்.

அந்த கிராமத்தில் நடக்கும் ஏனைய மரண வீடுகளைப் போல அழுகைச் சப்தம் - மரண ஓலம் - கேட்கவில்லை. மதுபோதையில் தள்ளாடிய படி நான்கு மனிதர்கள் சவப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து விறாந்தையின் முன்வைத்தர்கள்.

எல்லா சடங்குகளும் அரைகுறையாக நிறைவேறியது. அவளின் பிணமும் சுடுகாட்டை நோக்கிப் பயணமாகிவிட்டது. துக்கம் கொண்டாட வந்தவர்கள் எல்லாரும் கலைந்து போய்விட்டார்கள். கனகர் சற்று ஏக்கத்துடன், மனித வாழ்வை சலித்துக்கொண்டு புறப்பட தயாராகிய வேளையில் திடீரென்று காற்றும் மழையும் 'சோ' என்று கொட்டியது. அப்போது அவருக்கு அடைக்கலம் கொடுத்தது அந்த மாலதியின் கொட்டகை. நாலாபக்கமும் காடுகளால் சூழப்பட்ட இவளது கொட்டகையின் அருகில் இருந்த நாவல் மரத்தில் செம்பகம் ஒன்று உணவுத் தேடிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ நோட்டம் இட்ட வல்லூறு செம்பகத்தை மின்னல் வேகத்தில் கவ்வியதும் அந்த சம்பவத்தைக் கண்ணுற்ற கனகர் செம்பகத்தைக் காப்பாற்ற முயன்றார் இயற்கை அவருக்கு இடமளிக்கவில்லை. வல்லூறுக்கு இரையாகிய செம்பகத்தை நினைத்து, 'இன்றைக்கு என்பதும் நாளைக்கு என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்' என்ற பழமொழியை ஞாபகப்படுத்திக் கொண்டார்.

'பாடசாலையில் இருப்பதை விட, பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்து இந்த கொட்டகையில் இருக்கலாம் போல' என்று கனகர் மனத்திற்குள் நினைத்துக்கொண்டார். வெளியில் மழை கொஞ்சம் பெரிதாகவே பெய்யத் தொடங்கிது. கனகர் யாரும் இல்லாத அந்த கொட்டகைக்குள் இருந்த கதிரை ஒன்றை மெதுவாக இழுத்து அமர்ந்து, பத்து அடி நீள அகலம் கொண்ட அந்த குடிலை சுற்றும் முற்றும் ஒரு பார்வை பார்க்கின்றார். அவரது கண்களுக்கு ஒரு சுருட்டப்பட்ட பாயும் கிழிந்த போர்வையும் பக்கத்தே சிறிய கூடாக மூன்று பக்கங்களும் கடதாசி மட்டைகளால் அடைக்கப்பட்ட இடத்தில் மூன்று கற்கள் வைக்கப்பட்ட அடுப்பும் அதன் உள்ளே வெள்ளை நிறப் பூனை ஒன்று கறுப்பு நிறத்தில் மிகவும் களைப்புடன் தூங்கியது. அடுப்பின் மேல் ஒரு முட்டியும் அதற்கு எதிர் பக்கத்தில் கட்டப்பட்ட கயிற்றுத் துண்டில் இரண்டு தாதியர் சட்டைகளும் ஒரு 'டவளு'ம் ஒரு வெளிறிப்போன நீல நிற சட்டையும் உடைந்த மேசையில் சில புத்தகங்களும் உரிமையாளரைத் தேடுவதைப் போல காட்சியளித்தன.

காற்றும் மழையும் சற்று ஓய்ந்தன. மெதுவாக தகரத்தால் உள்ள அந்த கொட்டகையின் கதவை மெதுவாக இழுத்து துணிப்பட்டியால் கட்டிவிட்டு வெளியில் நகருவதற்கு எத்தனிக்கும் போது, தகரத்தின் சப்தம் பூனையின் காதுகளில் விழுந்துவிட்டது. அது தான் தனிமையில் இருப்பதை 'மீயா...மீயா...' என்று கத்தி உலகிற்கு அறிவித்தது. மீண்டும் கொட்டகைக்கு நிரந்தரமாக வந்து பூனைக்குச் சாப்பாடு வைக்கலாம் என்ற எண்ணத்தில் கனகர் இருப்பிடம் நோக்கி நகர்ந்தார்.

*08*

ஒரு சமயம்:-

பொழுது சாய்ந்து கொண்டு வருகின்றது. தற்காலிகமாக அகதி முகாம செயற்படும் யோகபுரம் மகா வித்தியாலத்தின் பொது மண்டபம் சனக்கூட்டத்தில் நிரம்பி வழிகின்றது. தாய்மாரைப் பிரிந்த சேய்கள் புட்டிப்பாலை கைகளால் தட்டிவிட்டு முக்காலமும் உணர்ந்த முனிவர்கள் போல உலகத்திற்கு எதையோ சொல்ல எண்ணுவதைப் போல சின்ன கொவ்வைப்பழ வாய்களை திறந்து கதறுகின்றன. முதியோர்கள் சிலர் அடிக்கடி மரணச்செய்தியைக் கேட்டுவிட்டு துக்கம் தாளாது அடியற்ற மரம் போல விழுந்து அழுதனர் புலம்பினர். மண்டபத்தின் ஒரு மூளையில் 'சிமெண்ட்' நிலத்தில் ஓலைப் பாயில் கனகரும் இரண்டு பிள்ளைகளும் அமர்ந்தவாறு, அந்த பல விதமான அரவத்திற்குள் ஆரவாரம் அற்ற சம்பாசணை நடத்தினர்.

"அப்பா இண்டைக்கும் அம்மாவ காணவில்லையா?" - மகளினின் வழமையான கேள்விக் கணை கனகர் மீது பாய்ந்தது.

"இல்லை, நாளைக்குப் பாப்போம்? படு மகள் நளைக்குப் படிக்க போகணும்." - தகப்பனின் வழமையான பதிலுடன் இன்று சற்று வித்தியாசமாக நாளைக்குப் படிக்க... என்பது சேர்ந்துள்ளது.

"அம்மா பாவம் அப்பா. அம்மா இந்த குளிருக்குள்ள எங்க இருக்கும்?... அம்மா... அம்மா... வேணும்" - கமலினி அடம் பிடித்தாள்.

அப்போது அங்கே இடையிடையே காற்றுடன் போராடி அங்குள்ளவர்களுக்கு ஒளியைக் கொடுத்துக்கொண்டிருந்த மெழுகுவர்த்திகளும் குப்பி விளக்குகளும் 'ஜேம்' போத்தில் விளக்குகளும் ஓரிரு லாந்தர்களும் எங்கே ஒரு பொது இடத்தில் 'பெற்றோல் மெச்'யும் எரிந்து கொண்டிருந்தன. அவற்றை விடில் பூச்சிகள் பதம் பார்த்தன. சில மெழுகுவர்த்திகளையும் குப்பி விளக்குகளையும் விடில் பூச்சிகளால் வெற்றிகொள்ள முடிந்தது் சில 'ஜேம்' போத்தில் விளக்கின் ஒளியை விடில் பூச்சிகள் வெற்றிகொண்டாலும் அவற்றால் உயிருடன் மீள முடியவில்லை லாந்தர்களுடன் மோத மட்டுமே முடிந்தன் 'பெற்றோல் மெச்'சுடன் மோதி மரணத்தை தழுவின. விடில் பூச்சிகளின் வேடிக்கைளைப் பார்த்த கமலி சிறிது நேரம் தன்னை மறந்து எழுந்து சற்று தூரம் நகர்ந்து சென்றாள்.

"அப்பா, அம்மா எங்க போயிருக்கும்?" - கேட்டான், சாத்.

"நானும் தேடாத இடமெல்லாம் தேடித் தேடி களைச்சு போனன்" - சலித்துக் கொண்டார், கனகர்.

"சில வேளையில் அம்மா எங்கள தேடிக் கொண்டிருக்குதோ, இல்லாட்டி காயம் கீயம் பட்டு, 'கொஸ்பிட்டல்' ல ஏதும் இருக்கோ?"

"தம்பி சாத் யோசித்துக் கவலை பட வேண்டாம். இன்னும் தேடிப் பார்ப்போம்"

"என்ன அப்பா? 1995 ஆம் ஆண்டு இஞ்ச வந்து இப்ப ஏழு வருஷமாச்சி இந்த வன்னி மண்ணில் அப்படி எங்க போயிற்று அம்மா?" என்று சாத், தனது தந்தை கனகரின் முகத்தைப் பார்த்துக் கேட்டான். "நீ கேட்கிறதிலையும் நாயம் இருக்கு. நீங்களும் வளந்திட்டிங்க. உண்ட தங்கச்சியும் கிட்டடிக்கே வவுனியா 'கொலிச்'சுக்குப் போகணும். உனக்கும் 'கட்டவுட்' புள்ளி வந்தவுடன் யாழ்ப்பாண 'மெடிக்கல் பெக்கல்டி'க்குப் போகணும். உங்க அம்மா பாவம் மகா ராணி நாங்கள் படுகின்ற கஷ்டங்கள பார்க்கக் கூடாது என்று எங்கையோ போயிருக்கு. எப்படியோ உங்கள் இரண்டு பேரையும் படிப்பிச்சாச்சி? எனக்கும் வயிசாச்சி... இனி உங்கட காலந்தான் நீதான் தங்கச்சிக்குத் துணை..."

"கவலைப்படாதிங்க அப்பா?"

"கவலைப்படவில்லை உண்மையை உனக்குச் சொன்னான்"

"தங்கச்சியை கடைசி மட்டும் நான் பார்ப்போன்"

"இல் சாத் நாங்க கொண்டுவந்த நகைகள் காசு எல்லாம் முடிஞ்சுப் போச்சி. எனக்கும் காயப்பட்ட கால்..."

"அப்பா, அம்மா எனக்குத் தந்த ஒரு 'செய்' இனும் ஒரு 'பெண்டன்' உம் இருக்கு"

"அதுகைளை நீ வைச்சிக் கொள்ளு உனக்குப் பல்கலைக்கழகத்திற்குப் போவதற்குக் கப்பல் 'டிக்கட்' எடுக்க பயன்படும்" "அப்பா, அம்மாவோட கடைசியாக 'போட்டில்' வந்ததுக்கு இனிதான் கடலில் கப்பலில் போகப்போறன்"

"பயப்படாத சாத் எப்படியும் அம்மா உனக்குத் துணை வருவாள்"

**தொடரும்...**



# பூகோள அரசியலினால் முற்றுகையிடப்பட்டுள்ள இலங்கை



இன்றைய சமகால அரசியல் பார்வையில் இலங்கை தீவு என்ற அடிப்படையில் பல்வேறுதரப்பட்டவர்கள் இன்று தமது காலணித்துவத்தை கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் செயற்படுகின்றார்கள். குறிப்பாக சீனாவின் ஆதிக்கம் இந்தியாவை விட மேலோங்கி நிற்கின்றது என்று கூறலாம். அதற்கு அடுத்தபடியாக அமெரிக்காவினது தலையீடு இங்கு காணப்படுகின்றமையும் ஒரு விசேட அம்சமாக பார்க்கப்படுகின்றது காரணம் என்னவென்றால் இன்று போர்ட்சிற்றியாக இருக்கலாம் அல்லது அம்பாந்தோட்டை துறைமுகமாக இருக்கலாம் அல்லது தாமரை தடாகமாக இருக்கலாம் இவ்வாறு எல்லாம் இலங்கையிலே அதனை வைத்து காலூண்றிய சீனா இன்று அவர்களது மொழிவாதியான நடவடிக்கைகளையும் இலங்கையில் மேற்கொண்டு வருகின்றது. ஒரு மொழியை ஒரு நாட்டில் காலூண்ற வைத்தால் உண்மையிலே அந்த இனம் காக்கப்படும் என்பது தான் அதன் மற்றுமொரு பொருளாக இருக்கின்றது. எனவே மொழியை அடிப்படையாக கொண்டு சீன கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கும் சீனாவினது நடவடிக்கைகள் இங்கிருந்து செயற்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை அவர்கள் செய்து வருகின்றார்கள். போர்சிற்றி என்ற ஒரு விடயம் என்பது அதில் சகல கலையாட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்ட ஒன்றாகவே போர்ட்சிற்றி அமையப்போகின்றது. எனவே இது இராஜதந்திர ரீதியிலான ஒரு அணுகுமுறையை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான ஒரு சமிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. அதாவது இந்தியாவினுடைய செயற்பாடுகளை இலங்கையில் இருந்து அப்புறப்படுத்தி பொருளாதார ரீதியாக இந்தியாவினது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி அவர்களது ஏற்றுமதி இறக்குமதிகளை இலங்கையில் இருந்து நீக்குமளவிற்கு சீனாவினது பொருளாதாரம் இன்று மேலோங்கியிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்திய ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஏதோ ஒரு உடன்படிக்கை ஊடாகவே எமது நாட்டிற்கு இந்த பணத்தை வரவழைத்திருக்கின்றார். அது அவரது இராஜதந்திர நகர்வு. எனவே இந்தியாவை பொருத்த வரையில் சீனா இந்த நாட்டிற்குள் காலூண்றி செயற்படுவதை ஒரு போதும் அனுமதிக்காது.

இந்தியாவினது ரோ தற்பொழுது புதிதாக ஒரு மதவாத சாதிவாத பிரச்சனை ஒன்றினை இலங்கையிலே தோற்றுவித்திருக்கின்றது. இது குறிப்பாக **RSS** ஊடாக இடம்பெறுவதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மதவாத பிரச்சனை எந்த நாட்டில் தீவிரப்படுத்தப்படுகின்றதோ அந்த நாட்டில் மீளவும் ஒரு யுத்தம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மீளவும் உருவாக்கப்படும் என்பது உலக வழக்கம். எனவே இந்த மதவாத பிரச்சனையை இலகுவாக எடுத்து விட்டால் அதனை கையாளுவது என்பது மிகவும் இலகுவான விடயமாகவே பலரும் கருதுகின்றார்கள். அந்த அடிப்படையில் இலங்கையின் வடகிழக்கு ஏனைய பகுதிகளிலும் கத்தோலிக்கம். இந்து போன்ற பிரச்சனைகள் தற்பொழுது உருவாகியிருக்கின்றன. கிறிஸ்தவ மதப்பரம்பல் ஏற்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு மறுபுறத்தில் கிறிஸ்தவர்கள் இந்துக்களது ஆலயங்களை உடைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் கிறிஸ்தவ மிசனரிகள் இலங்கையில் மதப்பிரச்சாரங்களில் ஈடுபட முற்றாக தடை எடுக்கப்படும் சூழலும் 2023 இல் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த பூகோள ரீதியிலான ஒரு பிரச்சனை இந்த நாட்டில் அன்றிலிருந்து இன்று வரை இருந்து கொண்டே இருக்கின்றது அதே நேரத்தில் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளிலே கோவில்களை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தடை உத்தரவை எடுக்கின்றது என்பது ஒரு வேடிக்கையான விடயம். அதாவது தமிழர் தாயக பிரதேசத்திலே ஒரு தெய்வ சிலையை அங்கு வைக்கக்கூடாது வைத்தால் அது தண்டனைக்குரிய குற்றம் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கின்றது. எனவே ஒரு மனசாந்திக்காக இறைவனை வழிபடுகின்ற ஒரு மத சுதந்திரம் இந்த நாட்டில் இல்லாமல் போகின்ற ஒரு சூழலை தற்பொழுது உருவாக்கி இதிலிருந்து ஒரு மதத்தீவிரவாதத்தை இங்கு உருவாக்கினால் பாரிய வெற்றியடைய முடியும் என்ற சீனாவினது ஒரு நிலைப்பாடு அல்லது இந்தியாவினது நிலைப்பாடாகத்தான் இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வெற்றி பெறுவதற்கு மிக முக்கியமாக மதத்தீவிரவாதமே இந்த நாட்டில் முக்கிய இடம் பிடித்தது. காரணம் என்னவென்றால் சஹாரானின் குண்டுத்தாக்குதல் என்பது முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டுகின்ற அல்லது முஸ்லிம்கள் அனைவரும் இந்த நாட்டில் தீவிரவாதிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கின்ற ஒரு நிலைமை இந்த நாட்டில் தோற்றுவிக்கப்பட்டு முஸ்லிம்களின் ஆதரவின்றி தனிப்பெரும் சிங்கள பெரும்பான்மையினால் வெற்றி கொள்ள முடியும் என்ற ஒரு நிலைப்பாட்டை இங்கிருக்கும் மக்கள் மத்தியிலே கோட்டபாய அல்லது மகிந்த ராஜபக்ச குழு விதைத்திருந்தது. அதன் அடிப்படையிலே அமோக வெற்றியை முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச பெற்றிருந்தார் அதே உத்வேகத்தை அவருடைய ஆட்சி கவிழ்க்கப்படுகின்றது எவ்வாறான உத்தியை கையாண்டு இந்த நாட்டிற்கு ஜனாதிபதியாக வந்தார். எப்படி எப்படியெல்லாம் பணங்களை சூறையாடினார் எவ்வாறெல்லாம் சொத்து சேர்த்தார் என்ற நிலைப்பாட்டை அதன் பின்னர் கண்டறிந்து தற்பொழுது அவரது குடும்பமே அரசியலில் இருந்து விலக்கப்படுகின்ற மற்றுமொரு சூழ்ச்சி ஏற்படுத்தப்பட்டு அவரும் அவரது குடும்ப அரசியலும் இந்த நாட்டிலிருந்து தூக்கி வீசப்பட்டு தற்பொழுது சர்வதேச தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு தலைவராக ரணில் விக்ரமசிங்க மாற்றப்பட்டிருக்கின்றார். அது போன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களது அங்கீகாரத்துடன் வங்குரோத்து வாக்கு வங்கிகளில் இருந்த ஒரு ஆசனத்தையேனும் பாராளுமன்றத்தில் ஈட்டிக்கொள்ளாத ரணில் விக்ரமசிங்க பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாகி பெரும் சாதனை ஒன்றை இந்த நாட்டில் நிலைநாட்டியிருக்கின்றார். எனவே அரசியல் என்பது நிரந்தர நண்பனும் எதிரியும் கிடையாது என்ற ஒரு நிலைப்பாட்டையே இங்கு தோற்றுவித்தாலும் இந்த நாட்டிலே பூகோள அரசியல் ரீதியிலான மாற்றங்கள் அவ்வப்போது இடம்பெற்று வந்தமை என்பது தான் உண்மையாக இருக்கின்றது. எனவே இந்த பூகோள அரசியலில் இருந்து இலங்கை தேசம் என்று விடுபடுகின்றதோ அன்று தான் ஒரு முழுமையான சுதந்திரத்தை அடைய முடியும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை.

எனவே அவ்வாறு இலங்கை ஒரு நல்ல செயற்பாட்டிற்குள் நிலைத்து சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு நாட்டில் ஒரு பொருளாதார பிரச்சனையை ஏற்படுத்தி குறிப்பாக இந்தியாவையோ சீனாவையோ அமெரிக்காவையோ அல்லது வேறு நாடுகளிடமோ கையேந்துகின்ற ஒரு நிலைமைக்கு இந்த பூகோள அரசியல் மாற்றிவிடுகின்றது. எனவே அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளை சிதைக்கின்ற ஒரு நோக்கத்துடன் தான் அவர்களுடைய ஆதிக்கம் இந்த நாட்டிலே செலுத்தப்படுகின்றது. தற்பொழுது அது வேறு வடிவில் மாற்றடைந்து அன்று யுத்தத்தை காரணம் காட்டி ஆயுதங்களை வழங்கி அந்த யுத்தத்தை முடிவுற செய்வதற்கு உதவி வழங்கிய இந்தியா சீனா அமெரிக்கா உட்பட 37 நாடுகளும் இன்று வேறு வழியாக அரசியல் ரீதியிலான பிரச்சனைகளை மதவாத சாதிவாத அரசியலை தோற்றுவித்து தொடர்ந்தும் இந்த நாட்டில் தமது கால் ஊன்றுவதற்கான ஸ்திர தன்மையை ஏற்படுத்தியிருக்கின்றது. தற்பொழுது நிலைமை மோசமடைந்து வருகின்றது. எனவே இதனை கண்டறிந்து இதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டால் மட்டுமே ஓரளவேனும் இங்கிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி இன்று புதிதாக இலங்கையில் இருக்கின்ற குரங்குகளை சீனாவிற்கு விற்பனை செய்கின்ற ஒரு பிரச்சனை பூதாகரமாக கிளம்பியிருக்கின்றது. வௌவால்களில் இருந்து கொரோனா வைரஸிற்கான தாக்கத்திற்கான சில நச்சுப் பதார்த்தங்களை கண்டெடுத்தது போன்று குரங்கில் இருந்து எதை தயாரித்து அல்லது அதனை எந்த பயன்பாட்டிற்கு எடுத்து மீண்டும் அதை எங்களுக்கே அனுப்பப்போகின்றார்கள் என்ற சந்தேகமும் தற்பொழுது எழுந்திருக்கின்றது.

50 ஆயிரம் ரூபாவிற்கு ஒரு குரங்கை கொள்வனவு செய்கின்ற சீனா அதில் ஒரு மாற்றத்திட்டத்தை வைக்காமல் எதையுமே செய்யப்போவதில்லை என்பது யதார்த்தம் இருந்தாலும் மேலதிகமான குரங்குகள் இந்த நாட்டில் இருக்கின்றன எனவே அவற்றை விற்பனை செய்கின்ற ஒரு நடவடிக்கையிலே இலங்கை அரசு தற்பொழுது முன் வந்திருக்கின்றது. இதற்கு பின்புலத்தில் இருக்கின்ற பிரச்சனைகள் பல்வேறு மட்டங்களில் பரபரப்பாக பேசப்பட்டாலும் குரங்கை சீராக குறிப்பிடுவதற்கான ஒரு நடவடிக்கை தற்பொழுது தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஏனென்றால் அதிகளவில் குரங்குகள் இந்த நாட்டில் வசிக்கின்றன என்றவொரு காரணத்தை காரணம் காட்டி அதற்கான ஒரு முன்னெடுப்புக்களும் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதில் எந்த வைரஸை மீளவும் எடுத்து உலக நாடுகளுக்கு சீனா அனுப்பப்போகின்றது. என்பதும் இன்று பல ஆய்வுகள் இது தொடர்பிலும் வெளி வந்திருக்கின்றன. எனவே இந்த பூகோள அரசியல் தொடர்ந்தும் ஒரு இலங்கை தீவிற்குள் தனது காலை ஊன்றுவதனால் அடுத்தடுத்த நகர்வுகளை நகர்த்துவதற்காக ஒரு சமாதான நிலைப்பாட்டை கொண்டு செல்வதற்காக அல்லது தமிழினத்தின் பிரச்சனைகளுக்கான தீர்வை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாத சூழல் தொடர்ந்தும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. 30 வருடகால போராட்டத்திற்கு ஒரு தீர்வு வேண்டும் என்ற அடிப்படையில் ஜெனீவாவிலும் சர்வதேச நீதிமன்றிலும் தற்பொழுது அரசாங்கத்திற்கு எதிரான விசாரணைகள் நிலுவையில் இருக்க இந்த சர்வதேச ரீதியிலான அரசியல் ஆடுகளத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்தந்த மாற்றங்களின் ஊடாக இலங்கை அரசு தன்னை தப்பித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. எந்த நாடு தம்மை தப்பித்துக்கொள்வதற்கு ஆதரவளிக்கின்றதோ அந்த நாட்டுடன் கைகோர்க்கின்ற ஒரு சூழலே இன்றைய காலகட்டத்தில் அமைவாக இருக்கின்றது.

எனவே இந்த அடிப்படையில் குறிப்பாக இந்த நாட்டிற்கு எதிராக சதிகளை மேற்கொள்ளுகின்ற சதிகார கும்பல்களை இலங்கை நாட்டினுடைய புலனாய்வு கண்டறிந்து அதற்கான ஒரு ஒழுங்கு முறைகளை மேற்கொண்டால் மட்டுமே இந்த நாடு ஒரு சுபீட்சமான பாதையை நோக்கி நகரும். அல்லது சீனாவினது காலனியாகவும் இந்தியாவினது காலனியாகவும் அல்லது அமெரிக்காவினது காலனியாகவும் காலப்போக்கில் மாறும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.





**இரணியன்**

# இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியும், வீழ்ச்சியும்



அண்மைக்காலமாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கையில் உல்லாச பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. அதிகரித்துவரும் அதே நேரம் சமூக சீர்கேட்டு நிலைமையும் ஏற்பட்டுள்ளது. 2011 வரையிலான இலங்கை சுற்றுலாத்துறையினுடைய வளர்ச்சி பற்றி பார்த்தால் இலங்கைக்கு தேசிய வருமானத்தை அதிகமாக தேடித்தரும் கைத்தொழில்களில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். எனினும் பல்வேறுபட்ட காரணங்களுக்காக சில தசாப்தங்களாக இத்துறை பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் அண்மைக் காலமாக இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சுற்றுலாத்துறை வெகுவாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. இலங்கையில் கடந்த காலங்களில் குறிப்பாக 2007 மற்றும் 2008 காலங்களில் கூட சுற்றுலாத் துறையின் வளர்ச்சி குறைவாகக் காணப்பட்டது.

2006 இல் பதிவுசெய்யப்பட்ட 559,603 பயணிகளை விட 2007 இல் 494,008 பயணிகளாக அதாவது 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2008 இல் இதைவிட வீழ்ச்சி அதாவது 438,475 ஆக 11.2 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக இக்காலப்பகுதிகளில் வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னாசியா, கிழக்காசியா, கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா போன்ற இலங்கைக்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வரும் நாடுகளில் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் மற்றும் நாட்டில் காணப்பட்ட யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட பாதுகாப்பற்ற நிலைமைகள் போன்றவற்றால் பயணிகளின் வருகை குறைவாக காணப்பட்டது எனலாம். எனினும் மத்திய கிழக்கு, மாலைதீவு, ரஸ்யா போன்ற நாடுகளில் இருந்து ஓரளவு அதிகரித்த வருகை காணப்பட்டது. எனவே சுற்றுலாத் துறையால் இலங்கைக்கு கிடைத்த வருவாய் பற்றி பார்க்கையில், 2006 இல் சுற்றுலா வருவாயானது 410 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2007ல் 385 மில்லியனுக்கும், இது 2008ல் 342 மில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தது என்றே கூற வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்தும் சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைவதை தடுக்கும் முகமாக இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதாவது, 2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விதிக்கப்பட்ட ஐ. அ. டொலர் 10 கொண்ட விசா கட்டணத்தை பிற்போட ஒப்புதலளித்தது. சுற்றுலா தொழிற்பாடுகளின் மீது கொடுபடத்தக்க பெறுமதிசேர் வரியினை தற்காலிகமாக பிற்போட்டமை, தாமதமான பெறுமதிசேர் கொடுப்பனவுகளின் மீதான தண்டப்பணத்தினை இடைநிறுத்தியமை மற்றும் மூலதன கொடுப்பனவுகளின் மீதான சட்ட இசைவுத் தாமதம் போன்ற வழிகளில் நிவாரண வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2007 இல் மிக முக்கிய செயற்பாடு யாதெனில் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா வெளிப்படுத்தல் சட்டம் 2007 ஒக்டோபர் 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டமையாகும். இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையுடன் இலங்கை அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், இலங்கை மாநாட்டு பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் என்பன தொழிற்பட தொடங்கியமையானது தனியார் துறையின் பங்களிப்பை உத்வேகப்படுத்தியது. புதிய சுற்றுலா சட்ட முகாமைத்துவத்தில் அரச, தனியார் பங்குடமையினையும் சுற்றுலா கைத்தொழிலினை கட்டுப்படுத்துவதிலும் கூடியளவிற்கு காத்திரமான தன்மையினை உருவாக்கியது. இத்துறையில் தனியார் துறையினர் முக்கிய தொழிற்பாட்டாளர்களாக இருப்பதனால், வெளிநாட்டு சந்தைகளையும் அதே போன்று உள்நாட்டு முயற்சிகளையும் இலக்காகக் கொண்ட சுற்றுலாக்கொள்கையின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான இத்துறையின் பங்களிப்பு அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகளின் மூலம் அதிகரித்தது. இதன் அடுத்த கட்டமாக 2008ல் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கு பல வழிகளை மேற்கொண்டது.

அதாவது, வளர்ச்சியடைவதற்குரிய உள்ளார்ந்த வளத்தைக் காட்டிய நான்கு முக்கிய சந்தைகளான இந்தியா, ஐக்கிய இராட்சியம், ரசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் மீது முக்கிய கவனம் செலுத்தி 2008 தொடக்கம் 2010 வரை சந்தைப்படுத்தல் உபாயம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டமை, வீழ்ச்சியடைந்து செல்லும் சுற்றுலா கைத்தொழிலுக்கு புத்துயிரளிப்பதற்காக கடன்களை மீள் அட்டவணைப்படுத்தல், 15 சதவீத எரிபொருள் மேலதிக கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய தூண்டல் பொதியொன்றை அரசாங்கம் முன்வைத்தது. எனினும் இலங்கையின் சுற்றுலாத் துறையானது இக்காலப் பகுதியில் பாரிய வளர்ச்சி காணவில்லை. இந்த சுற்றுலாத் துறையின் பின்னடைவானது 2009

## ஒரு சிறப்பு பார்வை!

ஆம் ஆண்டு முதல் 5 மாதங்கள் வரை நீடித்தது எனலாம். அதாவது, இக் காலப் பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.3 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் வீழ்ச்சியடைந்திருந்த வருகைகள் மே மாதத்தில் அதிகரித்தது. அதாவது, அடுத்து வந்த 7 மாத காலப் பகுதியிலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20.4 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக 2009 மே மாதத்திற்கு பின் உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமையானது. இலங்கையில் பயணம் மற்றும் சுற்றுலாத் துறைக்கு புதியதொரு யுகத்தினை திறந்திருந்தது. தமிழர்களுடன் இனப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகளுக்கான அச்சம் நீங்கியது. எனவே சூழ்நிலைகள் மாற்றமடைந்தமையால் சில நாடுகளால் விடுக்கப்பட்ட மோசமான பயண ஆலோசனைகள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது தளர்த்தப்பட்டன.



இதனால் 2009இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை பற்றி பார்க்கையில், பெரும் எண்ணிக்கையினர் இந்தியாவிலிருந்து வந்தனர் (83,634). அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராட்சியத்திலிருந்து வந்தனர் (81,594). அதேபோன்று மாலைதீவு (31,916), ஜேர்மனி (29,654) ஆகிய நாடுகளில் இருந்தும் வருகை தந்தனர். மத்திய கிழக்கு, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா என்பவற்றிலிருந்தும் குறிப்பிட்டளவு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது. எனினும் 2009ல் உலகளாவிய பொருளாதார மந்தம் மற்றும் சில நாடுகளில் பரவிய பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய் என்பன மக்களின் பயணத்திற்கு இடையூறாக அமைந்தன. 2009இல் இலங்கையின் சுற்றுலா வருவாய்கள் ஐ. அ. டொலர் 350 மில்லியனுக்கு 2.2 சதவீதத்தினால் அதிகரித்தன. இலங்கையை மொத்த பன்னாட்டு சுற்றுலா நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன்னும் போட்டித் தன்மையைக் கொண்ட நாடாகவே உள்ளது. மேலும் தங்குமிட விடுதிகளை பொறுத்தமட்டில் இலங்கை அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதாவது, தற்போது இலங்கையில் 14,800 தங்குமிட விடுதி அறைகளே உள்ளன. இதனை 2016 ஆம் ஆண்டு 40 ஆயிரம் அறைகளாக அதிகரிக்க உள்ளதாக அரசு தெரிவிக்கிறது. இதற்காக இலங்கை சுற்றுலா சபையினூடாக 16 ஹோட்டல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 418 அறைகள் கொண்டதாக இவை அமைக்கப்படும். அது தவிர பாசிக்குடா சுற்றுலா பிரதேசத்தில் 1000 அறைகள் கொண்ட 13 ஹோட்டல்களும், கல்லடியில் 350 அறைகள் கொண்ட இரு ஹோட்டல்களும், பெந்தோட்டையில் 250 அறைகள் கொண்ட ஹோட்டலொன்றும் அமைக்கப்பட, மேலும் மத்திய வங்கியின் அறிக்கையின் படி 2010இல் சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை 26 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 577,000 வருகைகளாகி, 2004ல் பதிவு செய்யப்பட்ட 566,000 வருகைகளை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுவதனால், சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும்.


சுற்றுலாக் கைத்தொழில் பாரிய வருமானத்தை உருவாக்கக்கூடிய உள்ளார்ந்த வளங்களை கொண்டிருப்பதனை கருத்திற்கொண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மோதல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதே போன்று முதன்மை சுற்றுலா மையங்களாக தெரிவு செய்யப்பட்ட தீவின் மற்றைய பகுதிகளிலும் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. அரசாங்கம் தீவின் மிகச் சிறந்த கரையோரம் என அறியப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதன்மை பொழுதுபோக்கு மையங்களான அறுகம்குடா, பாசிக்குடா மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள கரையோர நகரங்களை மேம்படுத்துவதற்கு எண்ணியுள்ளது. கற்பிட்டி மற்றும் உள்நாட்டில் அடையாளம் காணப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளை கவர்ச்சிகரமான சுற்றுலா அமைவிடங்களாக அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது. மேலும் சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய வேண்டுமெனில் இலங்கையின் தென்பகுதியில் மாத்தறை ஹிக்கடுவை, மிரிச, அம்பாந்தோட்ட போன்ற இடங்கள் இயற்கை வனப்பு கொட்டிக்கிடக்குமிடங்கள் என்பதனால் இவற்றின் கரையோரத்தை பாதுகாப்பதோடு, இங்கு அமைந்துள்ள விடுதிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையும் சுற்றுலாப் பயணிகளின் பல்வேறுபட்ட பிரிவினரையும் கவரும் விதத்தில் தொடர்ச்சியான விழாக்களையும் ஊக்குவித்து வருகின்றது. அதன் ஒரு கட்டமாக சூதாட்ட விடுதிகளை சட்டபூர்வமாக்க பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. 1978 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சூதாட்ட விடுதிகள் ஒழுங்கில்லாமல் உள்ளதாகவும், அவற்றை ஒழுங்கின் கீழ் கொண்டு வரவுள்ளதாகவும் அரசு தெரிவிக்கின்றது. முன்பு சூதாட்ட விடுதிகளை தடைசெய்த நாடுகள் கூட அவற்றை இன்று நடைமுறைப்படுத்தியுள்ளன என்று கூறி, உதாரணமாக சிங்கப்பூர் எடுத்துக்காட்டப்படுகிறது. சூதாட்ட விடுதிகள் சுற்றுலாத் துறையை வளர்க்கக்கூடியது தான் என்பதை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம்.

எனினும் இவை பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்கள் மற்றும் கோவில்கள் முதலிய வணக்கஸ்தலங்கள் போன்ற பொது இடங்களில் அமைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் குறிப்பிட்ட வயதின் கீழ் உள்ள ஆண்கள், பெண்கள் செல்ல முடியாதவாறு தடைசெய்யப்படுவதோடு, சமூக சீர்கேடுகள் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய தங்குமிட விடுதிகள் அழகிய சூழலில் அமைக்கப்பட்டாலும், அவை வாகன இரைச்சல், அசுத்தமான சூழல், சிறு வியாபாரிகளின் அத்துமீறல், திருடர்கள், போதைப்பொருள் பாவனை போன்ற பிரச்சினை இல்லாமல் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் முக்கியமான சுற்றுலா மையங்களாக விளங்கும் புனிதஸ்தலங்கள் மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் சேதப்படுத்தப்படா வண்ணமும் அசுத்தப்படுத்தப்படா வண்ணமும் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையை உலகிலுள்ள பாதுகாப்பான மற்றும் முக்கியமான சுற்றுலாத்தலமாக டைம்ஸ் சஞ்சிகை தெரிவித்தமை இனிவரும் காலங்களில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக அமையும் எனலாம். எனவே சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். அதாவது விடுதிகள், கடைகள், டக்ஸி மற்றும் முச்சக்கரவண்டி ஓட்டுனர், சிறுவியாபாரிகள், படகோட்டி, சுற்றுலாப் பயணிகளின் உதவியாளர்கள் என தொழில்வாய்ப்பு அதிகரிக்கும். உதாரணமாக ஹிக்கடுவையில் உள்ள 60 வீதமான மக்கள் சுற்றுலாத்துறை சார்ந்த தொழிலிலேதான் ஈடுபடுகிறார்கள்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் புதிதாக 10,000 பேர் சுற்றுலாத் துறைக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். 2014 ஆம் ஆண்டு இலங்கைக்கு 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. எனவே சுற்றுலாத் துறையை விருத்தி செய்யும் நோக்கில் அடுத்த வருடம் விஷிட் ஸ்ரீலங்கா என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளது. அத்தோடு இலங்கையின் சுற்றுலாத்துறை பற்றி சர்வதேச மட்டத்தில் **B. B. C.** மற்றும் **C. N. N.** தொலைக்காட்சிகள் மூலம் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவும் இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு கைகொடுக்கும் எனலாம். மேலும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இலங்கையில் நடத்த திட்டமிட்டுள்ளமை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமையப் போகின்றது. இலங்கையில் சுற்றுலாத்துறை வளர்ச்சியை நோக்கி!

**தொடரும்...**

**துரியோதரன்**



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளும், வலுக்கும் எதிர்ப்பும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி ஒருவர் மக்களது ஜனநாயகப் போராட்டங்களால் விரட்டியடிக்கப்பட்டதன் பின்னர், ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்காக பிரதமராகவிருந்த ரணில் விக்கரமசிங்க அவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, இதுவரை தான் வகித்திராத உயர் பதவிக்காக நியமிக்கப்பட்டார். பதவிக்கு வந்தவுடன் காலி முகத்திடலில் முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்சவின் அரசுக்கு எதிராக ஜனநாயகப் போராட்டங்களைச் செய்தவர்களை நாசுக்காக, முப்படைகளைக் கொண்டு களைத்தார். இரவோடிரவாக முப்படைகளும் காலி முகத்திடலில் அதிரடியாகக் களமிறங்கியதைக் காணக்கூடியதாகவிருந்தது. பலரின் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கைது நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டது. பொலிசாரின் விசாரணைகள், தேடுதல்கள் முடுக்கிவிடப்பட்டன. வலுக்கட்டாயமாக போராட்டக்காரர்களின் பந்தல்கள் அகற்றப்பட்டதையும், முப்படைகளின் அதிரடி நடவடிக்கைகளையும் காணக்கூடியதாகவிருந்தது. இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் தூண்டுதலாக இருந்தவர் பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தான். ஏனெனில் அவரே நாட்டின் முப்படைகளின் தளபதியாகவிருக்கிறார். கடந்த காலங்களில் அவர் மீது படிந்துள்ள மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி வழக்குடன், இந்த விடயமும் தென்னிலங்கை மக்களால் "ரணில் கோ கோம்" என்கிற அளவுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அவர் ஜனநாயக விரோதி என்கிற கோணத்தில் தென்னிலங்கை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த எதிர்த்தரப்பினரும் மேடை மேடையாக முழங்கிய முழக்கம் இன்றும் தொடர்கின்றது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து, முரண்பாடுகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி என்கிற ஒன்றை தனது தலைமையில் ஆரம்பித்து, ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கில், பிரிந்தால் தான் தனக்கு வாழ்வு என்கிற ஆழ்ந்த யோசனையில், ஐக்கிய தேசியக் கட்சியில் உடைவொன்றினை ஏற்படுத்திய சஜித் பிரேமதாச அவர்கள், தனக்கிருந்த உள்வீட்டுப் பிரச்சினையை இன்று பொது வெளியில் காட்ட ஆரம்பித்திருக்கிறார். இன்று நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள அவர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தான் நாட்டினை வழிநடத்த எதிர்காலத்தில் சரியான திசைநோக்கிச் செல்வதாகவும் கூறிவருகிறார். பதவிக்கு வந்தவுடன் கடுமையான எதிர்ப்பினை ரணில் அவர்களுக்கு வெளிப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த கலந்துரையாடல், பயங்கரவாதத் தடைச்சட்டத் திருத்தம், வடகிழக்கு அபிவிருத்திகள் எனப் பேச்சுவார்த்தை மேசைக்கு தமிழ்த் தரப்பை அழைத்தும் பயனில்லாமல் போனது. ஏமாற்றப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் இன்று ரணிலை எதிர்த்து நிற்கும் நிலை உருவாகியுள்ளது. இவர்களும் பாராளுமன்றில் எதிர்த்தரப்பாகவே இன்றைய அரசின் எதிர்ப்பாளர்களாக மாறியுள்ளனர்.

கடந்த நல்லாட்சியில் தமிழ் - முஸ்லீம்கள் எதிர்பார்த்த, செய்ய வேண்டிய வேலைகள் ஒன்றும் நடைபெறவில்லை. ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணியில் முஸ்லீம் மக்கள் அன்றைய அரசில் சந்தித்த துர்ப்பாக்கிய நிலை, இன்று வரை தீர்வுகள் எதுவும் வழங்கப்படாமல், கிறிஸ்தவ மக்களையும் இதற்குள் இணைத்து, இன முறுகலை ஏற்படுத்தும் விதமாக அரசுகள் செயற்பட்ட விதம், குற்றவாளிகளை இனங்காணாமல் சாக்குப்போக்குக் காட்டி காலத்தை இழுத்தடிக்கும் செயல் என ரணில் விக்கிரமசிங்கவின் மீது கடும் கோபத்துடன், இன்றைய முக்கிய முஸ்லீம் பிரதிநிதிகள் எதிர்த்தரப்பாக, அரசின் நடவடிக்கைகளை கண்டிப்பவர்களாக, மாறியிருக்கின்றனர்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களோ, சரிந்து போயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மிக விரைவில் சரிசெய்வேன் என காலத்தையும் நிர்ணயித்து, சர்வதேச நாடுகளின் உதவியைப் பெற்று, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை இலக்குவைத்து, நாட்டை இன்று மாற்றியமைக்கும் துரித வேலைத்திட்டங்களில் களமிறங்கியுள்ளதைக் காண முடிகிறது. பலமிலந்துபோயுள்ள ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் உயிர் கொடுத்து இந்த நாட்டின் சக்தியாக நிலை நிறுத்த வேண்டும் என்பது அவரது கனவு. தலைமைத்துவப் பதவி என்பதை எவருக்கும் விட்டுத்தர ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விரும்பவில்லை. அவரின் விடாப்பிடியான, எதையும் செய்யத் துணிந்த அவரின் குணாம்சம் தான் அவரை இன்று மிக உயரிய நாட்டின் பதவியில் அமர்த்தியிருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் கொண்டாடுகின்றனர். மறுபக்கத்தில் அரச ஊழியர்கள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிரடியான கருத்துக்கள், அரச நிறுவனங்கள் மீதான தொடர் தாக்குதல்கள் என ஒட்டுமொத்த நாட்டின் துறைகளும் இன்று அவரின் கழுகுப் பார்வையின் கீழ் வந்துள்ளன. தனக்கான நேரம் வரும் வரை காத்திருந்த ஒருவராகவும், நாட்டின் பொருளாதாரத்தை சீரமைக்க தான் எந்த எல்லைவரை செல்லவும் தயாராக இருப்பதாகவும் அடிக்கடி மார்தட்டிச் சொல்லக் கூடியவராகவும் இன்று மாறியுள்ளார். எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாமல், நாட்டின் அரச ஊழியர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். தொழிற்சங்கப் போராட்டங்கள் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னால் ஆரம்பித்தவுடனேயே வலுவிழந்து போவதைக் காண்கிறோம். இதனாலேயே ரணில் விக்கிரமசிங்கவின் மீதான எதிர்ப்பு அரச ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது. இதற்குப் பின்னால் அரசியலும் தாக்கம் செலுத்துவதாக தென்னிலங்கையின் வட்டாரங்கள் அடிக்கடி கூறுகின்றன. மறுபக்கத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் பல கோரிக்கைகளை முன்வைத்து, தீர்வினைக்கோரி போராட்டங்களை அடிக்கடி துணிந்து ஜனநாயக ரீதியாக மேற்கொண்டு வருகின்றனர். இப்போராட்டங்களின் போது தொடர்ச்சியாக பொலிசாரின் அடக்கு முறைகளையும், போராட்டங்களை அடக்க கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொள்வதைக் காண முடிகிறது. மாணவர்களைக் கைது செய்வதையும் காண்கிறோம். அவர்களும் இன்று அரசின் மீது வலுவான போராட்டங்களை மேற்கொள்ளத் தயாராகவிருக்கின்றனர். ஜனாதிபதி மீதான எதிர்ப்பும் வலுக்கிறது. தமிழ் மக்களும் வடக்கில் பௌத்தமயமாக்கல், காணாமல் போன உறவுகளுக்கு நீதி கோரி என பல தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்வைத்து வீதிகளில் கொட்டகைகளை அமைத்துப் போராடி வருகின்றனர். இலங்கை அரசிடம் கோரி பயன் இல்லை என்கிற ரீதியில் சர்வதேசத்திடம் நீதி கோருகின்றனர். ஏற்கனவே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமிழ் மக்களது விடயத்தில் நடந்து கொண்ட விடயம் தொடர்பில் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அதனாலேயே தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றனர். இன்னொரு பக்கத்தில் எதிர்த்தரப்பாக இருந்தவர்களை இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை நம்பினால் எதையும் உங்களுக்கு செய்து தருவேன் என நம்பிக்கை ஊட்டி, உயர் பதவிகள் மற்றும் எதிர்கால அரசியல் இருப்பினை உறுதிப்படுத்தி, வாக்குறுதிகளை வழங்கி, தன் பக்கம் இழுத்து வருகின்றார். இதில் முஸ்லீம் தரப்பு, தமிழ்த் தரப்பு, தென்னிலங்கை அரசியல்வாதிகள் என பலர் இன்று ரணில் பக்கம் உள்வாங்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் இணைவதற்கு ஆயத்தமாகவுள்ளனர்.

மறுபக்கத்தில் இந்த நாட்டின் நிலைமையை சீரமைக்கும் திராணி தன்னிடமே உள்ளது என்பதை மக்கள் மத்தியில் நிரூபிக்கும் வேலைத்திட்டங்களிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தீவிரமாக களமிறங்கியுள்ளார். அதற்காக நாடு முழுவதும் பயணித்து காட்டமான உரைகளை நிகழ்த்தி வருவதைக் காண்கிறோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் வாக்களித்து தன்னை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பது அவரது உள்நோக்கம். இவையெல்லாம் நடந்து கொண்டிருக்க, எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான யாத்திரை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற வழிபாடுகளுக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உட்பட கட்சியின் அமைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் யாழ்ப்பாணம் மத்திய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக கையெழுத்து சேகரிப்பும் இடம்பெற்றது. அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக நடைபெறவுள்ள குறித்த யாத்திரை யாழ்ப்பாணம், மன்னார், காத்தான்குடி, கண்டி மற்றும் கதிர்காமம் ஆகிய ஐந்து இடங்களில் இருந்து "பாசத்திற்கான யாத்திரை" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தலைமையில் நாட்டின் 5 இடங்களில் இருந்து ஆரம்பமாகும் "பாசத்திற்கான யாத்திரை" கொழும்பையும் சென்றடைந்துள்ளது.

இதே வேளை, கல்வி மற்றும் உயர்கல்வி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்களின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் தொடர்பிலான பகுப்பாய்வுக் கூட்டம் கடந்த (19) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போது, பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய செயற்பாடுகளாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, கடந்த வருடம் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்ட குழுவினரை கொண்டு இம்முறை விடைத் தாள்களைத் திருத்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

உயர்தர பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான மாற்று யோசனைகள் மற்றும் உரிய வேலைத்திட்டங்களை இவ்வார இறுதிக்குள் அறிவிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பரீட்சைகள் தொடர்பிலான பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தத் தேவையான பணிகளை முன்னெடுக்குமாறும் கல்வி துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இப்பணிகளில் ஈடுபட மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். கல்வி அமைச்சர் இது தொடர்பில் அறிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்குரிய அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கல்வித் துறைசார் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்தினார். இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், தற்போது ரணில் விக்கிரமசிங்க கூறிய காரணம் பாடசாலைகளில் வினாத்தாள் திருத்தம் சம்பந்தமாக வராவிட்டால் அந்த சேவையை அவசர சேவையாக்கி எல்லோரையும் நாங்கள் பலாத்காரமாகக் கொண்டு வந்து அவர்களது சொத்துக்களைக் கூட நாங்கள் எடுப்போம் எனக் கூறினார். அப்படிக் கூறுவதற்கு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. ஒரு அதிகாரமும் இல்லாத ஜனாதிபதி இவ்வாறு கூறுகிறார். பெப்ரவரி 28ஆம் திகதி தான் வினாத்தாள் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கவிருந்தது. அந்த சூழ்நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைக்காக வர தாமதமாகும் என்று கூறினார்கள். ஆசிரியர்களும் கொடுப்பனவு போதாத நிலைமையில் இதற்கு அவர்களும் விண்ணப்பிக்கவில்லை என்றார்கள். இந்தப் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுக்கும் போது, ஜனாதிபதி என்ன அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வாறு தெரிவிக்க முடியும். ஜனாதிபதியின் இந்தக் கருத்தானது பிரச்சினைகளையே அதிகப்படுத்தும். எதிர்காலத்தில் வினாத்தாள் திருத்தும் பணிகள் கட்டாயமாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி. இவ்வாறு செய்வதற்கு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. இவ்வளவு காலமும் வினாத்தாள் திருத்தும் பணிகள் ஒரு பிரச்சினையுமில்லாமல் சுமுகமாக இருந்தது. இவர் தான் பிரச்சினைகளை உருவாக்குவது. இந்தப் பிரச்சினைகள் பெப்ரவரி 22ஆம் திகதி நடந்ததன் பின்னர் பேசித் தீர்மானங்களை எடுக்க வேண்டிய கல்வி அமைச்சு இதனைச் செய்யவில்லை. அரசு ஒன்றும் செய்யவில்லை.நாங்கள் இதனைக் கணக்கெடுக்கப்போவதில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தையில் இருக்கிறார்கள். எனவே பேசி தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் பலாத்காரம் செய்கின்ற போது பாரிய பிரச்சினைகளே உருவாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இன்று கல்வி சார் சமூகமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்துக்கு எதிராக கொதித்தெழுந்துள்ளது. அதேநேரம் ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள், எதிர்கால இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் வரவேற்பு இல்லாமலும் இல்லை. அன்று அவரை எதிர்த்த சிங்கள மக்கள் எல்லோரும் இன்று ஜனாதிபதி ரணிலை எதிர்க்கிறார்களா என்றால், நிலைமை மாறியிருக்கிறது. அன்று அவரை எதிர்த்த எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் எல்லோரும் இன்று எதிர்க்கிறார்களா? என்றால் நிலைமை மாறியிருக்கிறது. மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார். ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் தன்பக்கம் திசைதிருப்புவதற்கான வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்து வருகிறார்.

ஜனாதிபதி ரணிலைத் அன்று தாங்கிப்பிடித்த பல அரசியல்வாதிகள் இன்று அவரிடமிருந்து விலகியிருக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய பலர் இன்று விலகிப்போயுள்ளனர். எஞ்சியவர்களும் மஹிந்த மற்றும் பசில் ராஜபக்ஷ வின் பாதுகாப்பிற்காக, அவர்களின் எதிர்கால குடும்ப அரசியலுக்காக இன்றைய ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இதனாலேயே ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஒத்து செயற்படுகின்றனர். இதனை ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் நன்கு அறிவார். பிளவுபடுத்தலுக்குப் பெயர் போனவராக அறியப்படும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், ஆட்சி அதிகாரத்திலிந்த தரப்பினரை இன்று துண்டுதுண்டாக உடைத்தெறிந்துள்ளார்.

ஒரு பக்கம் நாட்டின் எதிர்காலத்திற்காக, மக்களுக்காக என தீவிரம் காட்டும் ஜனாதிபதி, இந்த நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் குறித்துச் சிந்திக்கத் தயாராக இல்லை. பௌத்தமயமாக்கல் என்கிற நிகழ்ச்சி நிரல் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகிறது. பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் சிங்களக் குடியேற்றங்களை விரிவுபடுத்துவதிலும் காட்டும் அக்கறையை, பௌத்த தேரர்களும் சிங்கள ஆட்சியாளர்களும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மனித உரிமைகளைப் பாதுக்காத்தல், அதிகாரப்பகிர்வு, இனப்பிரச்சினைக்கானத் தீர்வு விடயங்களைக் கண்டுகொள்வதில்லை. மாறி மாறி அதிகாரப் போட்டிக்காகவும், தமது ஊழல்களை மறைத்து குடும்ப அரசியலுக்காகவும், எதிர்ப்பதும் பின்பு கூட்டணி அமைப்பதும் என தெற்கின் அரசியல்போக்கு மந்தகதியிலேயே பயணிக்கிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவர்களின் ஸ்திரத்தன்மையற்ற அரசியலால் இந்த நாட்டின் அமைதிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பின்னடைவே தவிர, வேறொன்றுமில்லை.

**சசிகரன்**

# பெண் தலைமைத்துவ குடும்பங்களில் நடப்பது என்ன?



ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்வியலும் பல்வேறு சவால்கள் சிக்கல்கள் போராட்டங்கள் என பல்வேறு அம்சங்களுடன் பிணைக்கப்பட்டதாகவே இருக்கும். அவ்வாறே ஒவ்வொரு வெற்றிகள் ஒவ்வொரு சாதனைகள் ஒவ்வொரு அடைவுகளின் பின்னரான பெரும் பயணத்தில் அத்தனை அம்சங்களும் அடங்கியே இருக்கும். இதிலும் பெண்களின் வாழ்வியல் என்பது சற்று கடினமானதாக அணுகப்படுகின்ற போதிலும் பெண் தலைமைத்துவ குடும்பங்களது வாழ்வியலானது மேலும் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. பெண் தலைமைத்துவ குடும்பத்தின் பொருளாதாரம். வாழ்வாதாரம். கல்வி. வேலை வாய்ப்பு என அனைத்திலும் பல வகை போராட்டங்களை சந்திக்க நேரிடுகிறது. முதலில் தலைமைத்துவம் என்ற அம்சம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான ஆளுமை மற்றும் திறன்கள் சார்ந்த வெளிப்பாடுகளாக காணப்படுகின்ற போதிலும் குடும்பத்திற்கான தலைமை பொறுப்பானது விரும்பியோ விரும்பாமலோ பெண்கள் எதிர்கொள்ளும் நிலையில். இச் சமூக பொருளாதார கண்ணோட்டங்கள் மற்றும் அணுகுமுறைகள் முற்றிலும் மாறுபட்டதாகவே காணப்படுகிறது.

இலங்கையில் பெண் தலைமைத்துவம் சார்ந்த பின்னணியை நோக்குகின்ற போது. காலம் காலமாக இப்பதம் சார் அணுகுமுறைகள் இருந்து வந்துள்ள போதிலும் இலங்கையில் நீண்டகால போரின் பின்னரே இவ் எண்ணக்கரு பெருமளவு பேசுபொருளாக நாடளவில் முக்கியத்துவம் பெற்றதெனலாம். குறிப்பாக வடக்கு கிழக்கில் 89000ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றன என்பது அதிர்ச்சியூட்டும் செய்தி என இலங்கை பிபிசி செய்திகள் தெரிவிக்கின்றது. இவ்வாறான நிலைகளில் அவர்கள் பெரும்பாலும் கணவனை இழந்தவர்களாகவும். திருமணம் செய்து கொள்ளாத முன்னாள் போராளிகளாகவும். விவாகரத்து பெற்றவர்களாகவும் காணாமல் போன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் துணையாகவும் இருக்கின்றனர். இவை தவிர குடும்ப தலைவர்கள் ஊனமுற்றவர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பெண்கள் குடும்ப பொறுப்பை ஏற்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. மேலும் இதில் வருத்தப்பட வேண்டிய விடயம் யாதெனில் இன்றளவிலும் பல பெண் தலைமைத்துவ குடும்பங்கங்களை சார்ந்த பெண்கள் ஊனமுற்றவர்களாகவும் தாழ் வருமானத்தை பெறுபவர்களாகவும் அதிக அளவிலான குடும்ப அங்கத்தவர்களை கொண்டவர்களாகவும் இருப்பதே. இவற்றை விட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பலரது பொருளாதார இடர்களில் அவர்களை தாங்கி வாழும் ஏனைய குடும்ப உறுப்பினர்களது அடிப்படைத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் நிமித்தம் மேலும் இறுக்கமானதாக இருக்கின்றது. சாதாரணமாக உணவு. உடை. உறையுள். கல்வி. சுகாதாரம். மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கூட பல்வேறான இடர்களை எதிர்கொள்பவர்களாக இருக்க நேரிடுகின்றனர். பசி பட்டினியற்ற வாழ்வியலும். சம உரிமைக்கல்வியும். உடல் ஆரோக்கியமும். பாதுகாப்பான வாழ்வும் வெறும் கனவாகவே நகர்கின்றன. இவை மட்டுமன்றி வீடற்ற வறிய குடும்பங்களிற்கான வீட்டுத்திட்டமுறை இலங்கை அரசினால் வழங்கப்படுகின்ற போதிலும் அவை பெரிதும் குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது. இவ்வாறான நிலையில் குடும்ப வருமானம் தாழ்நிலையில் இருப்பினும் குடும்ப அங்கத்தவர் தொகை குறைவாக இருக்கும் பட்சத்தில் சலுகைகள் பெற முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். குடும்ப அங்கத்தவர்களையும் கவனித்துக்கொண்டு. பிள்ளைகளது பாதுகாப்பையும் அடிக்கடி உறுதி செய்து கொண்டும் வருமானத்திற்காக தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் காரணமாக முறையான போதியளவு வருவாயை ஈட்டிக் கொள்ளுதல் என்பது சவாலாகவே அமைகின்றது. அதிலும் குறிப்பாக இச்சமூகத்தில் உடல் உள ரீதியான துன்பங்களால் பாதிக்கப்படும் சமூக வகுப்பினருள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சார்ந்த பெண்கள் எளிதில் அடங்குகின்றனர். சமூகத்தின் அணுகுமுறை என்ற அளவில் நோக்குகின்ற போது பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வலுவிழந்தவர்களாக அணுகப்படுதல் கவலைக்குரியது. அத்துடன் இலகுவில் விமர்சனங்களை இத்தகைய குடும்பங்கள் மீது இச்சமூகம் எளிதில் வீசிச் செல்கிறது. உதாரணமாக பணிக்குச் செல்லும் ஒரு பெண் தலைமைத்துவ பெண்ணினது நடை. உடை. பாவனை. பதவி உயர்வு. சம்பளம் போன்றவற்றை அவளது கடின உழைப்பு என்ற பார்வைக்கும் அப்பால் அவரது சுயநடத்தை வெளிப்பாடுகள் குறித்த எதிர்மறையான கருத்துக்களை வேண்டுமென்ற சுமத்துகின்றனர்.

உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் என்ற அளவில் இவ்வாறான குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் மட்டுமல்லாமல் தலைமை பொறுப்பில் இருக்கும் பெண்களும் நெருடல்களை சந்திக்கவே செய்கின்றனர். வறுமை. பொருளாதார பின்னணி. ஆள்பலமின்மை. பயம். விரக்தி. என்ற பல்வேறுபட்ட காரணிகளால் சந்திக்கும் துன்பங்கள் தொடர்பாக பேசுவதற்கும் பின்னிற்பதாகவே தெரிகிறது. குறிப்பாக நெருங்கிய உறவினர்களாலேயே இத்தகைய அசௌகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இதனால் குடும்பப் உறவுகளுக்கிடையே பிறழ்வுகள். புறக்கணிப்புகள். தனித்து விடப்படலாம் எனும் அச்சம். உதவிகள் மறுக்கப்படலாம் போன்ற காரணிகள் இவை தொடர்பான முறைப்பாடுகளுக்கு முரணாக அமைகின்றது என்பது வருத்தத்திற்குரியது. இவற்றையும் தாண்டி இவ்வாறான பிரச்சினைகள் சமூக அளவில் பேசப்படும் போது பாதிக்கப்பட்ட நபரையே குற்றவாளி எனும் கோணத்தில் அணுகுதலும் அதன் பின்னரான புறக்கணிப்புகளும் ஆரோக்கியமானதன்று. பொதுவாகவே பெண்களது குடும்ப தலைமை பொறுப்பானது மேலைத்தேய நாடுகளை விட கீழைத்தேய நாடுகளின் கலாச்சார போர்வைக்குள் திணிக்கப்பட்டதாகவும் முடக்கப்படும் அம்சமாகவுமே அணுக்கப்படுகின்றது. எதிர்பாராத நிலைமைகளில் திடீரென திணிக்கப்படும் குடுப்ப பொறுப்புக்களை மனதளவில் ஏற்றுக்கொள்வதற்குரிய தயாராகும் காலத்தை கூட சமுதாயம் அவர்களுக்கு கொடுப்பதில்லை. உலகில் எத்தகைய சமூக அமைப்புகளும் தற்கால கட்டத்தில் அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பெண்களுக்குக்கோ அல்லது பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கோ முன்னேற்றத்தை நோக்கி பயணித்தல் என்பதொன்றும் தவறல்லவே. ஆயினும் இச் சமூகம் அதனை எவ்வாறான கண்ணோட்டத்தில் அணுகுகின்றது எத்தகைய ஆதரவுகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குகின்றது என்பது தான் இங்கு கேள்விக்குறியே. குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பல குடும்பப் பெண்களின் கல்வியறிவு போதுமான அளவு இல்லாத நிலையில் ஒப்பந்தமற்ற வேலைகளுக்கும் செல்கின்றனர். இன்னும் சிலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக இதர பணிகளுக்காகவும் செல்கின்றனர். அனைத்து பெண்களும் பொதுவாக ஏற்கும் பணித்தளங்களே ஆயினும் இவை பெரிதும் பெண்தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த பெண்களிற்கு எதிர்மறையாக அமைகின்றன. ஒப்பந்தமற்ற பணிகளில் ஈடுபடும் பெண்கள் குறிப்பிட்டளவு ஊதியத்தையோ பணி தொடர்பான இதர சலுகைகளையோ பெறுவதற்கான உரிமைகள் இருந்த போதிலும் அவை அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

கல்வி என்பதனை எடுத்துக் கொண்டால் இலங்கையைப் பொறுத்தவரை இலவச கல்வியானது வழங்கப்படுகின்ற போதிலும் சகலருக்கும் கல்வியானது சம உரிமை என அறிவிக்கப்பட்ட போதிலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண் தலைமைத்துவ குடும்ப மாணவர்களில் பலர் பாடசாலை இடைவிலகல். வரவு ஒழுங்கீனம். முறையாக கற்றல் கற்பித்தல் பூர்த்தி செய்யப்படாமை போன்ற பாதக விளைவுகளை பரவலாக எதிர்கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர். காரணம் கற்றலுக்காக அதிகரிக்கும் இதர செலவீனங்கள் மற்றும் மேலதிக செலவுகள் போன்றவற்றை பூர்த்தி செய்வதில் உள்ள இடர்பாடுகளே. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கல்வியை பூர்த்தி செய்தல் பெரும் சவால் என்பதுடன் அதிகரிக்கும் வேலையற்றோர் தொகை போன்ற பிற சமூகச் சூழல்களாலும் குழந்தைகள் கல்வி இடைவிலகலோடு தொழில் வாய்ப்புக்களை நாடுவதற்கான விருப்பங்களை தெரிவிக்கின்றனர். இதில் அதிர்ச்சி தரும் விடயம் என்னவென்றால் தொழில் முயற்சிகளின் போதும் வேலை தளங்களிலும் பெண்களிடமிருந்து பாலியல் லஞ்சம் மற்றும் சுரண்டல்கள் கோரப்படுதலே. மிகவும் வலுவான குடும்ப பின்னணி அற்றவர்களாகவும் சமூக பொருளாதார ரீதியில் இவர்கள் பலவீனமாக சித்தரிக்கப்படுதலுமே இதற்கு பிரதான காரணமாக உள்ளது. அத்துடன் இக் குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு ஆளுமைகள் ஆற்றல்கள் இருக்கின்ற போதிலும் இச்சமூகத்தின் பிறழ்வான கற்பிதங்கள் பெண் தலைமைத்துவம் என்ற பதத்தையே பாதிப்புற்றதொன்றாக சித்தரித்து விடுகிறது. அதாவது ஆண்களே குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகளாகவும் தீர்மானம் எடுப்பதில் திடமானவர்களாகவும் பெண்கள் அவர்களின் தங்கி வாழ்பவர்களாகவும் ஆண்களற்ற நிலையில் பெண்கள் நிராதரவானவர்களாகவும் அணுகப்படுதலே. இதனடிப்படையிலான உளவியலாக பெண்களிடம் பொறுப்புக்கள் சிறு வயதிலிருந்து பகிர்ந்தளிக்கப்படாத போது திடீரென ஏற்றுக்கொள்ளல் கடினமே. மேலும் இவ்வாறான குடும்பங்களை சேர்ந்த பெண்கள் வட்டியற்ற மற்றும் வட்டியுடனான கடன் தொகை சுழல்களில் சிக்கிக் கொள்கின்றனர். வாழ்வாதார தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டோ. பொருளாதார வருமானங்கள் தாழ் நிலையிலிருத்தற் பொருட்டோடு இணைந்த தொழில் ஆரம்பித்தல் மற்றும் மேம்படுத்தல் தேவைகளின் நோக்கோடு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பண உதவி தொகையை நாடிச் செல்கின்றனர். ஒரு சில அமைப்புகள் வட்டி முறைகள் தொடர்பில் இயலுமான அளவு சலுகைகளை வழங்குகின்ற என்ற போதிலும் பெரும்பாலான நிறுவனங்களில் வட்டியுடனான நுண்கடன் வசதிகளை தேவையின் நிமித்தம் பெறுவதும் பின் அதனை பூரணப்படுத்த இயலாமல் உழல்வதும் தற்காலகட்டத்தில் அதிகரித்து வரும் பெரும் பிரச்சனையாக உள்ளமை யாவரும் அறிந்ததே. இதில் பெரிதும் பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த பெண்களே சிக்கிக்கொள்கின்றனர். இவற்றில் வெறுமனே கடன்களை வழங்கும் நிறுவனங்களை மட்டும் குறை கூறி விட இயலாது. பெறப்படும் கடன்களை திட்டமிட்ட முறையில் தொழில் மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் படிக்கும் சுழற்சிப்பொருளாதார அடிப்படையிலும் செயற்படுதல் நன்று.

இவைதவிர நுண்கடன் சூழலில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அறிந்தோ அறியாமலோ பாதிக்கப்படும்போது எவ்வாறான இடர்களை எதிர் கொள்கின்றனர் என்பது தொடர்பாக நோக்க வேண்டியது அவசியமாகும். குறைந்தளவு வட்டியில் கடன்களை இலகுவாக பெறமுடியும் என்கின்ற போது இக்கடன்களை பெற கிராமப்புறங்களை சேர்ந்த பெண்களே அதிக அளவில் முன்வருகின்றனர். பெரும்பாலும் நிறுவனங்கள் கடன் பெறுவோரது தொழில் முயற்சிகள் கடன் மற்றும் வட்டியை மீளச் செலுத்த இயலுமான காரணங்களை ஆராய்கின்ற போதிலும் அதிகரிக்கும் விலைவாசி. காலநிலை மாற்றங்கள். வாழ்வாதாரம் பாதிப்புறல். தொழில் வீழ்ச்சி. முறையான திட்டமிடலின்மை போன்றவற்றால் கடன்தொகை மீளச்செலுத்த முடியாமல் போவதோடு மேலும் கடனாளி ஆகின்றனர். துரதிஷ்டவசமாக கடன்தொகைகள் தொடர்பான சட்டரீதியான பாதுகாப்பு இந்தியா. இலங்கை முதலான நாடுகளில் இல்லையென்பது கவலைக்குரியது. சட்ட பாதுகாப்பின்மை மட்டுமல்லாமல் கடன் மற்றும் வட்டி வசூலிக்கும் முகவர்களது அணுகுமுறைகளும் பெரிதும் நெருடலை தோற்றுவிக்கின்றது. வட்டி வசூலிக்கும் முறைகள். மிரட்டல்கள் மற்றும் சமூக விமர்சனங்களுக்கு அஞ்சி கடனை செலுத்த இயலாமல் தற்கொலை முதலான முடிவுகளை நாடுகின்ற பெண்களும் அதிகளவில் உண்டு. இலங்கையை எடுத்துக்கொண்டால் அரசினால் குறிப்பிட்டளவு சலுகைகள் வழங்கப்படுகின்ற போதிலும் ஒப்பீட்டளவில் கணிசமான அளவு உயர் நன்மைகளை இக்குடும்பங்கள் பெறுவதில்லை. இன்றைய காலப்பகுதியில் இத்தகைய குடும்பங்களுக்கு வாழ்வாதார தொழில் முதலீடுகள் என அனைத்துமே பெரும் சவாலாக மாறியுள்ளது. தொற்றுநோய் காலத்தில் ஆண்களை விட பெண்களே தமது வாழ்வாதாரங்களை அதிகமாக இழக்கின்றனர் என்று இலங்கையின் ஐ.நா பெண்கள் அமைப்பின் பிரதிநிதியான ரமாயா விளக்குகின்றார். இந்நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை தொடர்பாக சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.



11ஆம் பக்கம் பார்க்க...

# பிராந்திய செய்திகள்

## வெட்டுக்காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்பு !

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோல்றீம் தோட்டத்தில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அக்கரப்பத்தனை பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வீட்டின் சமயலறையில் இருந்து குறித்த பெண் வெட்டுக்காயங்களுடன், சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பெண் கடந்த 16ஆம் திகதி தனது வீட்டிலிருந்து லிந்துலையில் உள்ள தனது மருமகனின் வீட்டுக்கு வருகைதந்துள்ளார். இதனையடுத்து சில நாட்கள் அங்கு தங்கியிருந்த நிலையிலேயே இந்தப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் வீட்டில் தனியாக இருந்ததாகவும், ஏனையோர் வீட்டில் இருக்கவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வவுனியாவில் காற்றுடன் கூடிய மழை 12 பேர் பாதிப்பு

வவுனியா வடக்கில் காற்றுடன் கூடிய மழை காரணமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அன்று வெள்ளிக்கிழமை (21) தெரிவித்துள்ளது.



வவுனியா மாவட்டத்தில் கடும் வெப்ப நிலை நீடித்து வருவதுடன், அவ்வப்போது மாலை வேளைகளில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகின்றது.

அந்தவகையில், அன்று மாலை (20) வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் மழை பெய்தது. இதன் காரணமாக வவுனியா மாவட்டத்தின் ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், சேனைப்புலவு கிராம அலுவலர் பிரிவில் கடையுடன் கூடிய வீடு ஒன்று சேதமடைந்துள்ளதுடன், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பாதிப்படைந்துள்ளனர். இதன்படி வவுனியா வடக்கில் மொத்தமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களுக்கு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவித் திட்டங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## சிங்கள, தமிழ் மொழிகளில் அரசாங்க நிறுவனங்களில் சேவை

எந்தவொரு குடிமகனும் சிங்கள அல்லது தமிழ் மொழிகளில் அரசாங்க நிறுவனங்களில் இருந்து சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுராதா விஜேகோன் தெரிவித்துள்ளார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய 2 மொழிகளும் அரசியலமைப்பில் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன, மேலும் ஒரு குடிமகன் இந்த நாட்டில் உள்ள அரசாங்க நிறுவனத்தில் சேவையைப் பெறும் போது, அவர் அல்லது அவள் தனக்கு தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் கோரலாம். அந்த உரிமை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் தேசிய மொழிகளாகக் கருதப்படுவதாகவும், ஒரு நாடு என்ற வகையில் அரச துறையில் மட்டுமன்றி வேறு எந்தப் பணியிலும் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டும் பிரதான மொழிகளாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அரச கரும மொழிப் பாடத்தை கையாள்வதற்கான தனியான பிரிவு ஒன்று இருப்பதாகவும், நாட்டின் அரச கரும மொழிக் கொள்கையை அரசியலமைப்பில் உள்ளடக்கி அதற்கு அதி முக்கியத்துவம் வழங்குவதற்கு அரசியலமைப்பிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அக்குரன பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படலாம் – சந்தேக நபர் கைது

அக்குரன பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படலாம் என 118 என்ற அவசர இலக்கத்திற்கு தவறான தகவலை வழங்கிய சந்தேக நபர் ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் அன்று (22) காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18 ஆம் திகதி இரவு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 118 என்ற அவசர இலக்கத்திற்கு அக்குறன நகரில் ஏதாவது நாசவேலைகள் இடம்பெறும் என தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

அதன்படி, பாதுகாப்புப் படையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், பல விசேட பொலிஸ் குழுக்களை அந்தப் பகுதிக்கு அனுப்பி வைத்தனர். இருப்பினும் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட தகவல் தவறானது என பின்னர் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

## A/L பரீட்சையின் தமிழ்மொழி மூலமான விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பம்!

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின், தமிழ்மொழி மூலமான விடைத்தாள்களை மதிப்பிடும் ஆரம்பக்கட்டப் பணிகள் அன்று(22) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய, சங்கீதம், நடனம், சித்திரம், நாடகக் கலை உள்ளிட்ட சில பாட விடயதானங்களுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு மத்திய நிலையங்களில், இந்தப் பணிகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பங்கள் போதிய அளவில் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்தப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில், தற்போது உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருவதாகவும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## பனையின் நுங்கு பருவகாலம் ஆரம்பம்

கற்பக விருட்சம் என அழைக்கப்படும் பனையின் நுங்கு பருவகாலம் ஆரம்பமாகிவிட்டது.



யாழ். செம்மணியில் வீதி, அரியாலை மற்றும் யாழ். நகர்மத்திய பகுதிகளிலும் நுங்கின் விற்பனை சூடுபிடித்து காணப்படுகிறது.

அதிகரித்து காணப்படும் வெப்பநிலை காரணமாக உடல் சூட்டினை தணிப்பதற்காக இந்த நுங்கினை பல பயணிகள் எடுத்தும்,உட்கொண்டும் வருகின்றனர்.

ஒரு நுங்கானது 100ரூபா முதல் 150ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதனை பலர் ஆர்வத்துடன் வாங்கி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

## மாளிகைக்காடு, சாய்ந்தமருதில் பெருநாள் தொழுகை

தியாகத்தை போதிக்கும் புனித நோன்புப் பெருநாளை நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் இம்முறை இலங்கை முஸ்லிங்கள் அமைதியான முறையில் நாடுதழுவிய ரீதியில் இன்று கொண்டாடி வருகிறார்கள். அதன் ஒரு அங்கமாக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் ஜும்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அல்- அக்ஸா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.ஆர்.எம். றியாஸ் (பஹ்மி) நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஆசிரியர் மௌலவி ஏ. ஹலீலுர்ரஹ்மான் (ஸலபி) நிகழ்த்தினார்.

அன்று(22) முஸ்லிங்கள் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் தொழுகையில் ஈடுபட்டிருந்ததுடன், தொழுகை முடிந்தவுடன் தமது அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறி கொண்டனர். மட்டுமின்றி காலமான தமது உறவுகளுக்காக ஜனாஸா மையவாடிகளில் துஆ பிராத்தனையில் ஈடுபட்டதை காணக்கூடியதாக இருந்தது.





## மார்ச் மாதத்தில் பணவீக்கம் கணிசமாகக் குறைவடைந்துள்ளது

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில்,மார்ச்மாதத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது பணவீக்கம் கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

பெப்ரவரியில் 53.06 வீதமாக காணப்பட்ட பணவீக்கம், மார்ச் மாதத்தில் 49.2 வீதமாக குறைவடைந்துள்ளது.




தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளி யிட்டுள்ள சமீபத்திய தரவுகளின் படி, மார்ச் மாதத்தின் உணவுப் பணவீக்கம் 42.3 மூன்று வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இருப்பினும், உணவு அல்லாத பணவீக்கம் தொடர்ந்தும் 54.9 வீதமாகக் காணப்படுகின்றது.

# சினி துளிகள்




## 40 வயதில் யூத் ஐகான் விருது

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வரும் தனுஷ், இயக்குனர், பாடலாசிரியர், பாடகர், திரைக்கதை எழுத்தாளர் என பன்முகத்தன்மைக் கொண்டவராக வலம் வருகிறார்.

சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான "வாத்தி" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று ரூ.100 கோடிக்கு மேல் வசூல் செய்து ஹிட்டானது. தொடர்ந்து தற்போது அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் "கேப்டன் மில்லர்" திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்திற்கு பிறகு மாரி செல்வராஜ் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். அனுராக் தாக்கூர் - தனுஷ் இப்படி பல படங்களில் பிசியாக நடித்து வரும் தனுஷ், சென்னையில் நடைபெற்ற தக்ஷின் மாநாட்டில் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் அவருக்கு யூத் ஐகான் விருது வழங்கப்பட்டது.

மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் இவ்விருதை தனுஷிற்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நடிகர் தனுஷ் பேசியதாவது, நாற்பது வயதில் யூத் ஐகான் விருது வாங்குவேன் என்று சத்தியமாக எதிர்பார்க்கவே இல்லை. இன்னும் நிறைய சாதிக்க இருக்கிறது. சினிமாவுக்கு வந்த புதிதில் நான் இதுபோன்ற தோற்றத்தில் வந்தபோது ஏற்க மறுத்தனர்.

ஆனால் தற்போது கொண்டாடுகிறார்கள். எனது பெற்றோருக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன் என நெகிழ்ச்சியாக பேசினார். இவருக்கு திரைப்பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.





## தனுஷ் - ஸ்ருதி ஹாசன் சர்ச்சை

தனுஷ் நடிப்பில் கடந்த 2012ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் 3. இப்படத்தை தனுஷின் முன்னாள் மனைவி ஐஸ்வர்யா இயக்கியிருந்தார்.

இப்படத்தில் தனுசுக்கு ஜோடியாக ஸ்ருதி ஹாசன் நடித்திருந்தார். இப்படம் வெளிவந்த நாளில் இருந்து தனுஷ் - ஸ்ருதி ஹாசனை சேர்த்து வைத்து பல விதமான வதந்திகள் எழுந்தது.

இன்று வரை அந்த வதந்திகள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், இதற்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நடிகை ஸ்ருதி ஹாசன் பேசியுள்ளார்.

அவர் கூறியதாவது

" இந்த செய்தி குறித்து பலமுறை நான் விளக்கம் கொடுத்ததும் ஏன் இது எங்களை தற்போதும் பின் தொடர்கிறது என தெரியவில்லை. இது ஒன்று மட்டுமல்ல, என்னை சுற்றி இதுபோன்ற ஆயிரம் வதந்திகள் வருகிறது".


"என் வாழ்க்கையில் தனுஷ் ஒரு முக்கியமான நண்பர். 3 படத்தில் நான் நன்றாக நடிப்பேனா என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது. அப்போது என் மீது அவர் நம்பிக்கை வைத்தார். இதுபோன்ற வதந்திகள் வருவதால் நான் மக்களை குறை சொல்ல விரும்பவில்லை".

"அதற்காக, எப்போதும்என் மீது சிப் பொருத்தி நான் போகும் இடம் எல்லாம் பாருங்கள் என்று நான் நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லை" என கூறியுள்ளார்.

## விரைவில் தொடங்கும் கமல் –மணிரத்னம் கூட்டணி

கமல்ஹாசன் விக்ரம் படத்துக்கு பிறகு தற்போது இயக்குனர் சங்கர் இயக்கத்தில் இந்தியன் 2 படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இப்படத்திற்கு பிறகு கமல், மணிரத்னம் இயக்கத்தில் "கேஎச்234" படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் கமல் ஜோடியாக நடிக்க திரிஷா பெயர் அடிபட்டது. ஏற்கனவே மன்மதன் அம்பு படத்தில் கமலுடன் திரிஷா நடித்து இருந்தார். எனவே திரிஷாவுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.



இதைத்தொடர்ந்து கமல்ஹாசனுக்கு ஜோடியாக நடிக்க நடிகை நயன்தாராவிடம் படக்குழு பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக கூறப்பட்டது. இந்நிலையில், "கேஎச்234" படத்தின் படப்பிடிப்பு குறித்து புதிய தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படத்தின் திரைக்கதை பணிகள் முடிந்து விட்டதாகவும் படப்பிடிப்பு வருகிற ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படவுள்ளதாகவும் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த தகவலானது ரசிகர்களை எதிர்பார்ப்பில் ஆழ்த்தியுள்ளது.

## ஜெயிலர் படப்பிடிப்பை நிறைவு செய்த ரஜினி

இந்திய திரையுலகின் முன்னணி நடிகரான ரஜினிகாந்த் தற்போது கோலமாவு கோகிலா, டாக்டர், பீஸ்ட் படங்களை இயக்கிய நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் 'ஜெயிலர்' படத்தில் நடித்து வருகிறார்.

இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் பிரியங்கா மோகன், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

இப்படத்தில் ரஜினி, முத்துவேல் பாண்டியன் கதாபாத்திரத்தில் ஜெயிலராக நடிக்கிறார். அதிரடி சண்டை படமாக தயாராகி வரும் இதன் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக வட மாநிலங்களில் விறுவிறுப்பாக நடந்து வந்தது. சென்னையிலும் ஜெயில் அரங்கு அமைத்து முக்கிய காட்சிகளை படமாக்கினர்.

இந்நிலையில் ஜெயிலர் படத்தின் படப்பிடிப்பை ரஜினிகாந்த் நிறைவு செய்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ரஜினி நடிக்க வேண்டிய அனைத்து காட்சிகளும் படமாக்கி முடிக்கப்பட்டு விட்டதாகவும், தற்போது டப்பிங், ரீ ரிக்கார்டிங் உள்ளிட்ட தொழில்நுட்ப பணிகள் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?




சுழியோடி

**17**



இவ்வாறான பயிற்சிகளுக்கு நடுவே ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்தும் நீண்ட தூர தாக்குதல் அணிகள் உருவாகின்றன. இவர்களுக்கான பயிற்சிகள் பெரும் காடுகளில் நடைபெற்று கொண்டிருந்தன. இவர்கள் நீண்ட நாட்கள் காட்டுவழியாக எதிரியின் முகாம்கள், அருவிகள், ஆறுகள் என்பவற்றை கடந்து சென்று எதிரியின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் உருப்பெற்று இருந்தார்கள். இவ்வாறு விடுதலைப்புலிகளின் படைக்கட்டுமானங்களில் ஏற்பட்ட பல வளர்ச்சிகளை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இதில் போராளிகளின் பயிற்சி தளங்கள் தொடர்பாக தொடர்ந்து வரும் தொடர்களில் தருகிறேன்.

புதிய புதிய போராளிகளின் உள்வாங்களால் விடுதலைப்புலிகளின் படையணிகளின் சிறந்த தலைமையாளர்கள் சிறந்த குறி சூட்டாளர்கள் என ஒரு பக்கம் சிற்ப கலைஞர்கள் சிறந்த கணணி இயக்குனர்கள் கணக்காளர்கள் என அறிவுத்திறன் சார்ந்த இன்னொரு பக்கமும் வளர்ச்சியடைந்து இருந்தது. மறுபக்கத்தில் கடற்புலிகளின் அணிகளும் புதிய போராளிகளை உள்வாங்கி பெரும் வளர்ச்சி கண்டுகொண்டு இருந்தது. வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கட்டைக்காடு தொடக்கம் பொக்கனை முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு அலம்பில் செம்மலை நாயாறு வரையான நீண்ட கரையோர பகுதிகளில் வாழ்ந்த மக்களில் பலர் தங்களது பிள்ளைகளை கடற்புலிகளின் அணியில் இணைத்திருந்தார்கள். கடலோடு வாழ்ந்து பழகியதால் அவர்களுக்கு கடலில் பயணிப்பதும் நீச்சலடிப்பதும் அத்துபடியாக தெரிந்திருந்ததால் பெற்றோர்கள் இவர்களை விரும்பி கடற்புலிகளில் இணைத்தார்கள். அத்துடன் கடலில் சிறிலங்கா படையினரின் தாக்குதலில் தமது உறவுகளை இழந்திருந்த பலரும் தமது பிள்ளைகளை இணைக்க முன்வந்தார்கள். இவர்களில் பலர் கடற்புலிகளின் அணியில் உள்வாங்கப்பட்டார்கள். இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் தளபதி சூசை அவர்களின் கீழ் வளர்க்கப்பட்டார்கள். இதே வேலை புதிய போராளிகளின் பயிற்சிகளின் நிறைவில் பெற்றோர் முன்னிலையில் பிள்ளைகளைகாண்பிக்கும்நடவடிக்கைபெரும் நிகழ்வாக நடந்தன. அதாவது அணிவகுப்பு மரியாதைகளுடன் புதிய போராளிகள் தமது பெற்றோர்களை காண்கிறார்கள் சந்திக்கிறார்கள். பயிற்சிகளின் காரணமாக பெற்றோர்களை நீண்ட நாட்களாக காணாத போராளிகளுக்கு பெற்றோர்களை அழைத்து வந்து பிள்ளைகளுக்கு காண்பிக்கப்பட்டார்கள். புதிய போராளிகள் தமது திறமைகளை தாய் தந்தை உறவுகளுக்கு சொல்லி மகிழ்ந்தனர். இதனால் பெற்றோர்கள் பூரிப்பு அடைந்தார்கள். தன் பிள்ளை பெரும் திறமைசாலி படை நடத்துபவன் பொறுப்பாளன் கனரக துப்பாக்கி இயக்குபவன் என்று அவர்கள் பெருமிதம் அடைந்து பிள்ளைக்கு பலத்தினை எட்டியது. இவ்வாறு தான் அன்று அனைத்து புதிய போராளிகளுக்கும் பெற்றோர் சந்திப்புக்கள் நடந்தேறின. புதிய போராளிகளின் நிறைவினால் விடுதலைப்புலிகளின் பலம் அதிகரித்து சென்றது கடற்புலிகளின் அதிகரிப்பால் புதிய படையணிகள் உருவாக்கப்படுகின்றன. தாக்குதல் அணிகளை விட கரையோர காவல்படை என புதிய அணி உருப்பெறுகின்றது. நிலைமை இவ்வாறு இருக்கையில் எதிரியின் ஆக்கிரமிப்பில் இருந்த யாழ் குடாநாட்டில் கைக்குண்டு வீச்சும் காவலரண் தகர்ப்பும் அங்குள்ள விடுதலைப்புலிகளால் நடத்தப்படுகின்றன. இதில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களும் பங்கேற்று எதிரிக்கு அழிவுகளை ஏற்படுத்தி கொண்டிருந்தார்கள். இவை யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படையினருக்கு ஆத்திரம் ஊட்டும் செயலாக மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடம் எதிரி யாழ்குடாவை விட்டு களமுனைக்கு நகர்த்த முடியாத நிலையினை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை விடுதலைப்புலிகளின் புலனாய்வாளர்களான பொது மக்களும் (இவ்வாறான தாக்குதலுக்கு என பயிற்றப்பட்டிருந்தவர்கள்) இணைந்தே மேற்கொண்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தான் யாழ்குடா நாட்டில் மேலும் சில தாக்குதல்களை நடத்துவதற்குஎனகரும்புலிகளைஉள்ளடக்கிய புலனாய்வுத்துறை அணி ஒன்று வன்னியில் இருந்து கடல் வழியாக கொண்டு செல்லப்பட்டு தரையிறக்குகிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஊடுருவி சிறிலங்கா படையினருக்கு பின்தள இழப்புக்களை ஏற்படுத்தும் முகமாகவும் சிறிலங்கா படையினரின் கனரக நீண்ட தூர தாக்குதல்களுக்கு பயன்படும் பீரங்கி நிலைகளை கண்டறிந்து அவரினை தகர்த்தெறியும்முகமாகவும்அதாவதுசிறிலங்கா படையினரின் பின்தளங்களில் ஆட்டிலறி மற்றும் மல்ரிபெரல் எறிகணைகளை இயங்க விடாமல் செய்வதன் மூலம் படையினருக்கு வழங்கல் பகுதியினை தடைசெய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக தரைவழியாகவும் கடல்வழியாகவும் யாழ் குடாவிற்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள். யாழ் குடாவிற்கான கடல்வழி பகுதியாக இருவழி பாதைகள் இருந்தன. ஒன்று வடமராட்சி கிழக்கில் இருந்து கடல்வழியாக சென்று கற்கோவளம் பகுதியில் தரை இறங்குதல். இதற்காக பயிற்றப்பட்ட அணிகள் செல்வார்கள். அதாவது கடலில் ஒரு மைல் தூரத்திற்கு மேலாக நீந்தக்கூடியவர்கள் தான் இந்த வழியினூடாக செல்வார்கள்.



வடமராட்சி கிழக்கு கடல் மற்றும் நாகர்கோவில் கடற் பகுதிகளில் சிறிய படகுகள் விரைந்து சென்று கற் கோவளத்தை அண்டிய கடற்பகுதியில் இவர்களை இறக்கிவிடுவார்கள் இவர்கள் கடலில் நீந்தியவாறு படையினரின் நடமாட்டங்களை அவதானித்து கரையேற வேண்டும். மற்றையது யாழ்ப்பாணத்தில் அடுத்த பகுதியாக உள்ள கிளாலி கடல் பகுதியாக உள்ள குருநகர் பாசையூர் பகுதிகளில் சென்று தரை இறங்குதல் அங்கு வரும் கடற்தொழிலாளர்கள் சிலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினாலேயே இதற்கு இலகுவாக இருக்கும் என்பதால் அவர்களுடனான தொடர்புகள் பேணப்பட்டு கடல் வழியிலான பயணம் இடம்பெறும் கடலில் இடையில் வரும் அவர்களிடம் போராளிகள் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் தரையில் இறக்கிவிட்ட நிகழ்வுகளும் நடந்தேறின. இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு சென்று தமிழ் மக்கள் நடமாட தடைவிதிக்கப்பட்டுள்ள படையினரின் உயர் பாதுகாப்பு வளையத்தினுள் உள்ள இடங்களுக்கு எல்லாம் சென்று அங்கு தகவல்களை திரட்டியது மட்டுமல்ல படையினரின் உணவினையே உண்டு படை நிலைகளுக்குள்ளே பதுங்கி வாழ்ந்த மாபெரும் வரலாற்று வீரன் தான் கரும்புலி லெப் கேணல் புட்டோ. ஆனாலும் கரும்புலி புட்டோ உண்பதற்கு உணவின்றியும் முகாம்களுக்குள் நடமாடி இலக்குகளை சரியாக இனம் கண்டு சொல்லியிருக்கிறான். இதே வேளை யாழ்குடா சென்றிருந்த போராளிகளை மக்கள் பராமரிக்கிறார்கள் அவ்வாறான மக்கள் அன்றைய நாளில் இருந்தார்கள் என்றால் அது பெருமிதம் தான். ஏனென்றால் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மக்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் விடுதலைப்புலி ஆதரவாளர்களும் இருந்தார்கள். அவர்கள் ஊடாக மீளும் பல ஆதரவாளர்களும் கைதாகிறார்கள். அன்று யாழ்ப்பாணத்தில் வீடுகளில் நின்ற புலிகளை எவ்வாறு என்றாலும் கைது செய்து விட படையினர் முற்படுகின்ற வேலை தன்னைத்தானே சுட்டும் விடுதலைப்புலிகளின் கொள்கை மரபுக்கு அமைய நஞ்சினை கடித்தும் வீரச்சாவு அடையும் நிகழ்வுகளும் நடந்தேறின. இவ்வாறு தான் லெப் கேணல் புட்டோ வீடு ஒன்றில் தங்கியிருந்த வேளை அந்த வீட்டை சிறிலங்கா படையினர் சுற்றி வளைத்து முற்றுகை இட்டனர் படையினரின் முற்றுகையை உடைக்க முடியாது என்பதை அந்த கரும்புலி போராளி உணர்ந்து கொண்டிருந்தான் தான் உயிருடன் பிடிபட்டால் யாழ் குடாவில் செயற்படும் போராளிகள் பலருக்கு ஆபத்து நேரும் என்பதை பூட்டோ அறிந்திருந்தான்.

எனவே தனது உடம்பில் கட்டியிருந்த வெடிகுண்டினை வெடிக்கவைத்து தன்னைத்தானே அழித்து விடுதலைக்கு வித்தானான். அந்த கரும்புலி இவ்வாறான தெய்வ பிறவிகள் தான் அன்று யாழ்ப்பாணத்தில் நின்ற கரும்புலி அணிகள் பூட்டோவின் இழப்பினை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் கரும்புலி அணிகளின் வேவு நடவடிக்கை சற்று மந்தமடைந்தது. இதனால் நகர் கோவில் கண்டால் பகுதிகள் ஊடாக விடுதலைப்புலிகளின் மேலும் சில வேவு அணிகள் சிறிலங்கா படையின் கட்டுப்பாட்டுக்குள் நுளைகின்றார்கள். இதில் தளபதி தீபன் அவர்களின் வேவு அணிகள் சிறப்புற அவர்களது நடவடிக்கையில் ஈடுபடுகிறது. இந்த நிலையில் தான் லெப் கேணல் தியாகராயன் தலைமையில் ஓர் அணி அதாவது புலனாய்வுத்துறை அணி அங்கு களமிறங்குகிறார்கள்.

**தொடரும்...**

# நறுமணமூலிகைத்தாவரங்களும் உள சுகவாழ்வும்



**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

*அரச பதிவு இலக்கம் - 10,294*
*மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி,*
*நெல்லிப்பளை.*



சித்த த்த மருத்துவமானது மிகப் பெரிய பரிசாக (**The "greatest gift**) சித்தர்களால் இயற்கை வளங்களைப் (**Natural Resources**) பயன்படுத்தி மூலிகை குணப்படுத்தும் (**Herbal healing**) முறைகளை வியந்து பேசியுள்ளனர். மூலிகைகளின் குணப்படுத்தும் ஆற்றல் (**Healing powers of herbs**). மூலிகைத் தாவரங்கள் தொடர்பாடல் திறன் உடையவை என்பதை சித்தர்கள் முன்பு குறிப்பிட்டுள்ளனர். தற்பொழுது விஞ்ஞானிகள் தாவரத்தின் பூ, பட்டை, கிளை, இலை ஆகியவற்றின் மூலம் தொடர்பாடலை மேற்கொள்வதை ஆராய்கின்றனர். மூலிகை இரசாயனங்கள் (**Phyto-Chemicals**), அதிர்வலைகள் (**Vihrations**), நறுமணம் கொடுக்கும் ஆவியாகும் எண்ணெய் (**Volatile oil**), மின்சார் வெளிப்பாடு (**Electric Signals**) மூலம் மூலிகைத் தாவரங்கள் தொடர்பாடலை மேற்கொள்கின்றன. உலகத்திலுள்ள சக்தியானது (**Cosmic energy transmission**) மூலிகைகளுக்கும் ஏனைய உயிர் அங்கிகளுக்கும் இயற்கையாகக் கிடைக் கின்றது. நறுமணம் கொடுக்கும் மூலிகைகள் சுக வாழ்வுப் பயன்களை (**Health Benefits**) கொடுப்பதாக இருக்கின்றது.

தாவரங்களின் நறுமணமூட்டி எண்ணெய்களில் (**Armatic oil as perfumes or essential oils**) நோய் எதிர்ப்புசக்தி மேம்படுத்தும் ஆற்றல் (**Immunity boosting powers**) உடையதாக இருப்பதுடன் உடல், உணர்வு ரீதியான சுக வாழ்வை மேம்படுத்துவதுடன் (**Enhances physical and emo tional health**) இவற்றில் உள்ள பைற்றோ அலெக்ஸின் (**phyto alexins**) நோய்க் கிருமிகளுக்கு (**Pathogen**) எதிராகத் தொழிற் படுவதுடன் மேலும் பல நறுமணம் ஊட்டும் மூலிகைத் தைலங்களின் சிகிச்சை (**Aromatherapy**) பொருளாதார நெருக்கடி நிலையில்ஏற்படும் நித்திரையின்மை (**Insomnia**), மன அழுத்தம் (**Stress**) போன்றவற்றைச் சீர்ப்படுத்துவதாக அமைகின்றது. இவ் வகையான பயன்களைப் பெறுவதற்கு மூலிகைகள்.

சேதனப் பசளைகள், இயற்கை பூச்சி விரட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வளர்க்கப்படும் போது தான் அவை மனிதரின் நோய் எதிர்ப்புச் சக்தியை வளப்படுத்தும் ஆற்றலை உடையதாகக் காணப்படுகின்றன. நறுமணம் ஊட்டும் எண்ணெய்களைத் தலையணையில் பூசும் போது உறக்கம் வருவதையும் மன அழுத்தம் குறைவதையும் காணலாம். இணையவழிக்கல்வியால் மாணவரிடத்தில் கவனக்குறைவு, ஞாபகப் படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. கவனக்குறைவு, ஞாபகசக்திக்குறைவு ஆகியவற்றைச் சீர்ப்படுத்துவதற்கு வெண் பூசனி, குமிழங்காய், வல்லாரை, நீர்பிரமி ஆகியவற்றுடன், உள்ளத்தைச் சீர்ப்படுத் தும் விளையாட்டுக்கள், தியானம், யோகாசனம், கவனத்தனச் சீர்ப்படுத்தும் பயிற்சிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

மூலிகைத் தாவரங்களில் இருந்து எண்ணெய்களைப் பிரித்தெடுத்து (**Extracting Plant based oils**) நறுமணத் தைலங்கள் ( **Fragrant oil** ) மருத்துவ தேவைக்குப் பயன்படுத்தப்படுவதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுடன், உள்ளூரிலே வருமானம் வழங்கும் திட்டம் (**Income generating project**) ஆகவும் திகழ்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைகழகம், சப்ரகமுவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முது விஞ்ஞானமானி (**M.Sc**), அல்லது ஆயுள்வேத நிபுணத்துவ படிப்பு (**M.D Ayurveda**) நடத்தப்படுகின்றது. களனிப் பல்கலைக் கழகத்தில் ஆயுள்வேத சத்திர சிகிச்சை முதுவிஞ்ஞான மானி படிப்புக் கூட நடத்தப்படுகின்ற நிலையில் யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை தனது நாற்பது ஆண்டுகளை நோக்கிய பயணத்தில் இக் கற்கை நெறிகளை நடத்தாமையால் தமிழ் சித்த மருத்துவ மாணவர்கள் மேற்கூறிய பல்கலைக்கழகங்களுக்கு அல்லது வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று நிபுணத்துவப் பட்டப்பின் படிப்பைத் தொடர வேண்டியுள்ளது. நாற்பது ஆண்டுகளை நோக்கிய சித்த மருத்துவப் பயணத்தில் பல்வேறு தலைவர்கள் வந்து போன பின்பும் சித்தமருத்துவ நிபுணத்துவப் பட்டப் பின் படிப்பு ஆரம்பிக்கப்படவில்லை. தற்பொழுதுள்ள சூழ் நிலையில் இந்தியாவில் உள்ள சித்த மருத்துவ பேராசிரியர்களை சூம்செயலியூடாக விரிவுரையாற்ற அழைத்து பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளைச் சிறப்பாக முன் நகர்த்த முடியும் சமூகத்திற்கு யாழ்பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறையின் மகத்தான பங்களிப்பு தேவைப்படுகின்றது.

எமது மூளை வளத்தையும், மூலிகை வளத்தையும் பயன்படுத்தி மூலிகை மருத்துவத்தின் உன்னதத்தை ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்துவதுடன், பல்வேறுபுதியதளங்கள்மூலம்அறிவுக்கையளிப்புநிகழ்த்துவதுடன், புதிய மகத்தான உச்சங்களை எட்டுவதற்கான முனைப் பான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். தன்னம்பிக்கையோடும் முழு சக்தியோடும் காலத்தின் தேவைக்கேற்ப புதுமைகளைப் படைக்க யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை தயாராக வேண்டும். (வளரும்)

---

07 ஆம் பக்க தொடர்ச்சி...

அத்துடன் இவற்றிற்கான தீர்வுகள் பலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வலுவூட்டலாக அமைதலிலும் பார்க்க அதிகமாக வாழ்வியலுக்கான உதவிகளாகவே அமைகின்றது. பெண் தலைமைத்துவ குடும்பங்களது சமூக பொருளாதார உயர்வுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல முயற்சிக்கின்ற வகையில் பல விழிப்புணர்வு நிகழ்வுகள் . வாழ்வாதார செயற்பாடுகள் என பல்வேறு திட்டங்களை செயல்முறை படுத்துவதாக இருப்பினும் இன்றளவிலும் இலங்கையின் சமூக கட்டமைப்பில் பெண் தலைமைத்துவம் எனும் பதம் சிக்கலானதொன்றாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பெரிதும் உதவி என்பது பகிரப்படும் என்ற போதிலும் குறித்த பெண்களுக்கே தம் வாழ்வியலை முன்னேற்றத்தின் போக்குக்கு இட்டுச் செல்லக்கூடிய உதவியாக எது தேவையென்ற தெளிவற்ற நிலையில் இருக்கின்றனர். அத்துடன் குடும்ப சுமை காரணமாக வீட்டிலேயே குறைந்த வருமானம் தரக்கூடிய தொழில்களையே ஆற்றல்கள் இருப்பினும் நாடுகின்றனர். முதலில் பெண்கள் தமது குடும்ப பொருளாதார முன்னேற்றம் தொடர்பான தெளிவு நிலை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். இவ்வாறான தெளிவற்ற நிலையினாலோ என்னவோ பெருமளவு உதவி வாய்ப்புக்கள் இருந்தும் அவை அனைத்தும் கோழி வளர்ப்பு, ஆடு மற்றும் மாடு வளர்ப்பு, தையல், வீட்டுத்தோட்டம் போன்றவற்றையே மையப்படுத்தியதாக இருக்கின்றது. இவை மட்டுமல்லாது சந்தைப்படுத்தும் வாய்ப்புக்கள் போட்டித் தன்மை காரணமாக இவற்றை பாரியளவில் மேற்கொள்ள இயலாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இவை தவிர பெறப்படும் சலுகைகளும் உதவிகளும் முறையான பயன்படுத்தப் படுகின்றனவா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. உதாரணமாக கோழிக்கூடு அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படும் போது அதற்குள் வளர்ப்பதற்கான கோழிக்குஞ்சுகளை வாங்க இயலாமல் இருக்கின்றனர். தொழில் இயந்திரங்கள் வழங்கப்படும் போது அதனை பயன்படுத்தவும் பழுது பார்க்கவும் தெளிவில்லாமல் இருக்கின்றனர். இதனால் வளங்களையும் வாய்ப்புகளையும் முறையாக பயன்படுத்த இயலாத நிலைக்குள் தள்ளப்படுகின்றனர். சமூர்த்தி, அமரா, **WIN, CPCED**, விழுது, சர்வோதயா போன்ற பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க தயாராக இருக்கின்றன. அதே வேளை பெண்களும் தமது வாழ்வியல் தொடர்பான முன்னேற்றங்கள் தொடர்பில் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். பெண்கள் கடன் உதவிகளை பெறும் போது அவை வெறுமனே உதவிகளாக மட்டுமே நின்று விடாது அவற்றை ஒரு முதலீடாக இருக்குமாறும் எக் காரணத்திற்காக கடனுதவியை நாடினார்களோ அவற்றை பூரணப்படுத்துபவர்களாகுவும் தம்மை வலியைப் படுத்திக் கொள்ளுதல் குடும்பங்களின் பொருளாதார நிலைப்பாட்டை உறுதிசெய்யும். இவ்வாறான குடும்பங்களது வலுவூட்டல் தொடர்பில் அரசிற்கும் பெருமளவு கடப்பாடு இருக்கின்றது.

ஆகவே உதவிகள் அனைத்தும் ஆக்கபூர்வ முயற்சிகளாக மாறுவதற்கான அழுத்தங்களையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல் நன்று. கலாச்சார ரீதியாகவும் தலைமைத்துவ பெண்கள் போராட வேண்டிய நிலையில் இருக்கின்ற போது அவர்களது கல்வி மற்றும் பொருளாதார உயர்வே இவ்வாறான சமுதாய தடைகளை முறியடிக்கவும் வலுசேர்க்கும்.போராட்டங்களை சந்தித்த மூதூர் கிராமத்தின் பல பெண்கள் சத்துணவு உற்பத்தியில் ஈடுபட்டு "சஞ்சீவி" எனும் அமைப்பில் அரசின் உரிமை சாதனத்துடன் பாரிய அளவில் தொழில் முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். இவ்வாறு பெண்களது முயற்சிகள் பயனுள்ளதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருத்தல் நன்று. அத்தோடு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தனிமனித மற்றும் சமூகத்திற்கும் பெரும் பங்கு உண்டு. பிரச்சனைகள் பிரச்சினைகளாக மறைக்கப்படுவதனால் மட்டுமே தீர்வுகள் காண இயல்வதில்லை. வன்முறைகள் வெளியே சொல்லப்படுமளவிற்கு பெண்கள் தயாராக வேண்டும். உரக்க குரல் கொடுப்பதன் மூலம் உரிமைகளை வென்றெடுப்போம் என உறுதி செய்து கொள்ள வேண்டும். வளம் மிக்க ஆற்றல் மிக்க எதிர்கால தலைமுறைக்கொரு வழிகாட்டியாக வாழ ஒவ்வொரு பெண்களும் மனதளவிலும் வாழ்வியலிலும் பயணித்தல் பயன்மிக்கது. வாழ்தல் இனிது.

**"ஒரு பெண்ணைப் படிக்க வைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானது"**

**– டிக்கன்ஸ்–**

# மகளிர் பக்கம்



## பகலில் தூங்குவது ஆரோக்கியமானதா? எத்தனை மணி நேரம் தூங்கலாம்?

பொதுவாக பகல் நேரத்து தூக்கத்தை மருத்துவர்கள் அறிவுறுத்துவதில்லை. பகலில் தூங்கினால் இரவு நேரத்தில் தூக்கம் சரியாக வராது. தூக்க சுழற்சி பாதிக்கப்படும் என்பது தான் காரணம்.

பகலில் தூங்க வேண்டும் என விரும்புவோர். அந்த நேரத்து உறக்கத்துக்கான தேவை ஏன் ஏற்பட்டது என யோசிக்க வேண்டும். இரவில் 7 - 8 மணி நேரம் ஆழ்ந்த உறக்கம் கிடைக்கிற நிலையில். அந்த நபருக்கு பகல் வேளையில் தூக்கம் தேவைப்படாது. இரவு நேரத் தூக்கம் ஏன் பாதிக்கப்படுகிறது என்பதையும் யோசிக்க வேண்டும்.

பகல் நேரத்தில் தூங்க நினைப்பவர்கள் அதை 20 நிமிடங்களுக்கு மேல் நீடிக்க விடக்கூடாது. பகலில் 20 நிமிடங்களுக்கு மேல் தொடரும் தூக்கம். இரவு நேர தூக்கத்தை பாதிக்கும் என்பதை ஆய்வுகளும் நிரூபித்திருக்கின்றன.

சிலர். வார நாள்களில் பரபரப்பாக ஓடிக்கொண்டே இருப்பதால். வார இறுதி நாள்களை வெளியே செல்வது. படம் பார்ப்பது போன்றவற்றுக்காகச் செலவழிப்பார்கள். அதனால் வழக்கமான தூக்க நேரம் தள்ளிப்போகும். அது ஆரோக்கியமான விடயமல்ல. வார நாள்களோ. விடுமுறை நாள்களோ... எல்லா நாள்களிலும் ஒரே நேரத்தில் தூங்குவதைப் பின்பற்றுவதுதான் ஆரோக்கியமானது.

தவிர்க்க முடியாத தருணங்களில் இதை அதிகபட்சமாக ஒரு மணி நேரம் தள்ளிப்போடலாம். அதற்கு மேல் தூக்கத்தைத் தள்ளிப்போடுவது சரியானதல்ல.

## வீட்டிலேயே ஜில் ஜில் ஃபலூடா செய்வது எப்படி?

**தேவையான பொருட்கள் :**

ஐஸ்கிரீம் செய்ய பால் - 1 கப்
ஓரம் நீக்கப்பட்ட பிரெட் -3
சர்க்கரை - 1/2 கப்
எசன்ஸ் -1 தேக்கரண்டி

**ஃபலூடா செய்வதற்கு:**

வேகவைத்த சேமியா- 1 கப்
ஜெலி - 1 கப் நறுக்கிய பழங்கள் (அப்பிள். திராட்சை. பப்பாளி. வாழைப்பழம்)
செர்ரி பழம் - 3
முந்திரி. காய்ந்த திராட்சை - சிறிதளவு

செய்முறை: முதலில் பாலை நன்கு சுண்ட காய்த்து கொள்ள வேண்டும். காய்ச்சிய பாலில் அதில் பிரெட் துண்டுகளை போட்டு சிறிது நேரம் அப்படியே வைத்து விட வேண்டாம். பால் ஆறியதும் அதில் சிறிது சர்க்கரை சேர்த்து மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து அந்த கலவையை ஒரு 4 மணி நேரம் ஃபிரீஸரில் வைத்து விட வேண்டும் பிறகு அந்த ஐஸ்கிரீம் கலவையில் எசன்ஸ் ஊற்றி மிக்ஸியில் போட்டு அடித்து விட வேண்டும். பின்பு ஒரு பாத்திரத்தில் மாற்றி 5 மணி நேரம் ஃபிரீஸரில் வைத்து விட வேண்டும். ஒரு நீளமான கண்ணாடி டம்பளரில் முதலில் சேமியா போடவும். பின்பு மேல் குறிப்பிட்ட அனைத்து பழங்களும் ஒன்றன் பின் ஒன்றாக போடவும். அதன் மேல் முந்திரி. காய்ந்த திராட்சை போடவும். கடைசியாக அதில் மேல் ஐஸ்கிரீம். செர்ரிபழம். ஜெலி வைத்து ருசி பார்க்கவும் ஜில் ஜில் ஃபலூடா ஐஸ்கிரீம் தயார்.

## கடலை மாவை பயன்படுத்துவதால் ஏற்படும் மாற்றங்கள்...!

அழகை பேணி காப்பதில் கடலை மாவிற்கு முக்கிய பங்கு உள்ளது. பொலிவிழந்த சருமத்தை இளமையூட்டும் தன்மை கடலை மாவிற்கு உண்டு. தினமும் முக அழகிற்கு, கடலை மாவு பயன்படுத்தி வந்தால் நல்ல மாற்றத்தை உணரலாம்.

கடலை மாவுடன் கொஞ்சம் வெள்ளரி சாறு கலந்து நன்கு குழைத்து பாதிப்பு உள்ள சரும பகுதிகளில் நன்கு பூசவும். பின் இருபது நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விடவும். சருமம் வழுவழுப்புடன் திகழும்.

கடலை மாவில் சிறிது நீரை கலந்து, முகத்தில் பூசி கொள்ளுங்கள். நன்கு உலர்ந்த பின்பு குளிர்ந்த நீரால் கழுவுங்கள். இவ்வாறு செய்து வருவதனால் முகத்தில் உள்ள சுருக்கங்கள் மறையும்.

குளிக்கும் போது சோப்பிற்கு பதில் கடலை மாவை பயன்படுத்தி வந்தால், சருமம் வழுவழுப்பாக இருக்கும். கடலை மாவுடன், மஞ்சள் மற்றும் 1 ஸ்பூன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி கொள்ளுங்கள். பிறகு 20 நிமிடம் கழித்து, முகத்தை கழுவினால் முகம் பிரகாசமாக ஜொலிக்கும்.

கடலை மாவுடன் பாதாம் பவுடர் மற்றும் எலுமிச்சை கலந்து குழைத்து முகம் முழுவதும் பூசி 30 நிமிடம் அப்படியே விடவும். பிறகு குளிர்ந்த நீரில் கழுவி விடவும். இதன் மூலம் முகம் பிரகாசமாக தோன்றுவதுடன் சரும ஆரோக்கியமும் மேம்படும்.

கடலை மாவுடன் சந்தனம், ரோஸ் வோட்டர், தேன் கலந்து முகப்பூச்சு செய்தால் முகத்தில் உள்ள அழுக்குகள், இறந்த செல்கள் வெளியேறுவதுடன் சருமம் மென்மையும் வழுவழுப்பும் பெறும்.



## வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க சில வழிமுறைகள்



வெயில் காலத்தில் நீரிழப்பு அதிகம் இருப்பதால் அதிகமாக தண்ணீர் அருந்த வேண்டும் என்பது முதலாவது முக்கிய விஷயமாகும். குறிப்பாக நீர் மோர். பதநீர். நுங்கு. இளநீர் ஆகியவற்றை உட்கொள்ளலாம். வியர்வை மூலமாக உடலில் இருந்து வெளியேறும் உப்பு சத்துக்களை இது ஈடு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் தர்பூசணி. எலுமிச்சை சாறு மற்றும் பழச்சாறுகள் ஆகியவற்றை அவ்வப்போது குடிக்க வேண்டும். மேலும் அடிக்கடி எண்ணெய் தேய்த்து குளித்தால் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து உடலை பாதுகாத்துக் கொள்ளலாம்.

அதேபோல் நீர் காய்கறிகளான சுரக்காய். புடலங்காய். பூசணிக்காய் பரங்கிக்காய் ஆகியவையும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் அவ்வப்போது வெள்ளரிக்காய் சாப்பிடுவது உடலுக்கு நல்லது என்பதும் குறிப்பிடத்தக்கது



## குழந்தைக்கு வேர்க்குரு வராமல் தடுக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

கோடைகாலத்தில் குழந்தைகளுக்கு பலவிதமான பிரச்சனைகள் ஏற்படும் அதாவது. குழந்தைக்கு சூடுபிடித்து சிவப்பு தடிப்புகள். வேர்க்குரு. சூட்டு கட்டி போன்ற பலவிதமான பிரச்சனைகள் ஏற்படும். கோடைகாலத்தில் குழந்தைகளுக்கு பலவிதமான பிரச்சனைகள் ஏற்படும் அதாவது. குழந்தைக்கு சூடுபிடித்து சிவப்பு தடிப்புகள். வேர்க்குரு. சூட்டு கட்டி போன்ற பலவிதமான பிரச்சனைகள் ஏற்படும். எனவே குழந்தைகளை இம்மாதிரியான பிரச்சனைகளில் இருந்து பாதுகாக்க குழந்தையின் உடலை குளிர்ச்சியாக வைத்து கொள்ள வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

பிறந்த இரண்டு மாத குழந்தையாக இருந்தால் தண்ணீர் அதிகமாக கொடுக்கலாம். குழந்தை தண்ணீர் அதிகம் அருந்தவில்லை என்றால் உலர்திராட்சியை தண்ணீரில் ஊறவைத்து அந்த நீரை குழந்தைக்கு கொடுக்கலாம்.

தினமும் குழந்தையை ஒரு முறை குளிப்பாட்டி விடலாம் இதனால் குழந்தைக்கு உடல் சூடு தணியும்.

அதேபோல் குழந்தைக்கு தினமும் தலைக்கு தேங்காய் எண்ணெய் தேய்த்து விடலாம். எண்ணெய் குழந்தையின் உடலை குளிர்ச்சியாக வைத்து கொள்ளும்.

குழந்தையின் படுக்கையை அடிக்கடி மாற்ற வேண்டும். அதுவும் குழந்தையின் படுக்கையானது காட்டன் துணியாக இருப்பது மிகவும் சிறந்தது. காட்டன் துணி குழந்தையின் உடலை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ளும்.

மேலும் குழந்தையின் படுக்கும் அறையில் ஏர்கூலர். ஏசி போன்ற குளிர் சாதங்கள் பொறுத்தப்பட்டிருந்தால் அதன் காரணமாக குழந்தையின் உடல் சூடு பிடிக்கும். எனவே இதனை தவிர்க்க குழந்தையின் கால் விரலில் மிக சிறிதளவு விளக்கெண்ணெயை வைத்து விடலாம். இதனால் குழந்தையின் உடல் குளிர்ச்சியடையும்.

குழந்தைக்கு வேர்க்குரு வந்துவிட்டால் உடனே வேர்க்குரு பவுடரை பயன்படுத்துவதற்கு பதில். சந்தனம் அல்லது நுங்கு சாறினை குழந்தையின் வேர்க்குரு மீது தேய்த்து மசாஜ் செய்யலாம். இவ்வாறு செய்வதினால் ஓரிரு நாட்களில் குழந்தையின் வேர்க்குரு பிரச்சனை சரியாகிவிடும்.

குழந்தைகளுக்கு வேர்க்குருடன் சிவப்பு தடிப்புகள் ஏற்படும் அதற்கு சிறிதளவு வேப்பிலையை பறித்து மைபோல் அரைத்து குழந்தையின் வேர்க்குரு உள்ள இடத்தில் நன்றாக அப்ளை செய்யுங்கள். இவ்வாறு செய்வதினால் குழந்தையின் வேர்க்குரு சரியாகும்.

குழந்தைக்கு வேர்க்குரு குறைய இரண்டு ஸ்பூன் கடலை மாவுடன் ஒரு ஸ்பூன் பால் அல்லது ரோஸ் வாட்டர் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். இந்த கலவையை குழந்தையின் வேர்க்குரு உள்ள இடத்தில் அப்ளை செய்யங்கள். பின் காய்ந்ததும் கழுவிவிடுங்கள் இவ்வாறு செய்வதினால் குழந்தையின் வேர்க்குரு குறைய ஆரம்பிக்கும்.

குழந்தைக்கு வேர்க்குரு மிகவும் எரிச்சல் உணர்வை ஏற்படுத்தும் அதன் காரணமாக குழந்தைகள் அழுக ஆரம்பித்துவிடுவார்கள். அந்த சமயத்தில் வேர்க்குரு உள்ள இடத்தில் சிறிதளவு தேங்காய் எண்ணெயை வைத்து மசாஜ் செய்யலாம் இதனால் எரிச்சல் குறையும் மேலும். வேர்குரும் சரியாகிவிடும்.

சாதம் வடித்த கஞ்சி குழந்தையின் வேர்க்குரு பிரச்சனையை சரி செய்ய ஒரு சிறந்த மருந்தாக விளங்குகிறது. எனவே சாதம் வடித்த பின். அந்த கஞ்சியை நன்கு ஆறவைத்து பின் அதனை வேர்க்குரு மீது நன்றாக தேய்த்து விடுங்கள் பின் நன்கு காய்ந்ததும். குழந்தையை குளிப்பாட்டிவிடவும். இதனால் வேர்க்குரு விரைவில் சரியாகும்.





# இலங்கையின் விவசாயத்துறை வளர்ச்சி பாதையில் செல்கின்றதா?

உலகில் தேயிலை ஏற்றுமதியில் தன்னிகரற்ற நாடாக திகழ்ந்தது இலங்கை என்றால் அதுமிகையாகாது. 1978க்கு முன்னர் தன்னிறைவு பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் விவசாயத்துறை மிக முன்னேற்றகரமான பாதையில் அபாரமான வளர்ச்சியில் சென்று கொண்டிருந்தது. இலங்கை ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகித்த தேயிலை. இறப்பர். தெங்கு. வாசனைத் திரவியங்கள் போன்றவற்றின் ஏற்றுமதியில் அதிக அந்நிய செலாவாணியை பெற்றுக் கொண்டது. 1978 க்கு பின்னர் இலங்கையில் உருவான திறந்த பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் விவசாயத்துறையினையும் அதே அளவு முன்னுரிமையுடன் செயல்படுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் 1990 களின் முற்பட்ட காலப்பகுதி விவசாயத்தில் இயற்கை உரப்பாவனை மிக அதிகளவில் மேற்கொள்ளப்பட்டதுடன் கிருமிநாசினிகள் தெளித்தல் முறையானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றதுடன் விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பம் புகுத்தப்படாத காலமாக காணப்பட்டது.

இலங்கையின் சனத்தொகையில் 60 வீதத்துக்கு மேலானவர்கள் விவசாயத்தினை மேற்கொண்டதுடன் விளைச்சல்களை அதிகமாக பெற்றதொரு பொற்காலமாக 1990 களுக்கு முன்னர் காணப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மையே. அக்காலகட்டங்களில் இலங்கையில் இன மோதல்கள் உச்சம் பெற்ற காலப்பகுதி குறிப்பாக வடகிழக்கு பகுதி போரின் உக்கிரத்தை அனுபவித்த காலம் இருந்த பொழுதிலும் இலங்கையின் வடபகுதி விவசாயத்துறையில் அதிகளவான நிலங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தரிசு நிலம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் அனைத்து நிலங்களிலும் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. அதே அளவு நிலைதான் கிழக்கு மாகாணப் பகுதிகளிலும் இடம்பெற்றது. அக்காலகட்டப் பகுதிகளில் வடகிழக்கு பகுதிகளுக்கு அரசுகளால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதுடன் இரசாயன உரங்கள் கிருமிநாசினிகளுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டிருந்தது. இருந்த பொழுதிலும் இயற்கை உரம் கொண்டு வடகிழக்கு விவசாயிகள் விவசாயத்துறையில் அபாரமான சாதனைகளை அக்காலத்தில் நிகழ்த்தி முடித்திருந்தனர். நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் கூட தடை விதிக்கப்பட்டு இருந்தது. அத்துடன் வடபகுதிக்கான மின்சாரம் முற்றாக தடைப்பட்டு இருந்தது. இவ்வாறான ஒரு அவல நிலையிலும் அங்கு விவசாயம் தன்னிறைவு நோக்கி வேகமாக பயணித்துக்கொண்டு இருந்தது.

அக்காலப்பகுதிகளில் விவசாயத்துறையில் ஈடுபட்டவர்கள் அத்துறையில் பற்றுறுதியுடனும் காலக்சிரமத்திற்கு ஏற்ற பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக்கூடிய அறிவுத் தன்மையும் காணப்பட்டது. இலங்கையில் 2000 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதிகளில் ஆட்சிக்கு வந்த அரசுகள் விவசாயத்துறைக்கு அதே அளவு முன்னுரிமை வழங்கியதுடன் மானியங்கள் அடிப்படையில் விவசாயிகளுக்கு பல சலுகைகள் வழங்கியதுடன் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயத்துறைக்குள் புகுத்தப்பட்டது. இருந்த பொழுதிலும் இன்றைய காலகட்டங்களில் விவசாயத்துறை வளர்ச்சி அந்த பாதையில் பயணித்துக்கொண்டு இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. 2009 க்கு பின்னரான இன மோதல் முற்றுப்பெற்றதுடன் வடகிழக்கு பகுதிகளுக்கான இரசாயன உரங்கள் கிருமி நாசினிகள் மற்றும் எரிபொருள் தடைகள் நீக்கப்பட்டதுடன் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்த விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன் விவசாயம் மேற்கொள்வதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருந்தது. இருந்த பொழுதிலும் விவசாயம் வீழ்ச்சி பாதையில் சென்று கொண்டிருப்பது நிதர்சனமான உண்மை. இவ்வாறு விவசாயத்துறை வீழ்ச்சி பாதையில் செல்வதற்கான காரணங்கள் இங்கு கூறிக்கொண்டே போகலாம். விவசாயத்துறையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி. தொடர்ச்சியான இரசாயன உரப் பாவனை. மற்றும் கிருமிநாசினிப் பாவனையால் நிலத்தின் தன்மையில் மாற்றம். எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை. விவசாயப் பயிர்கள் மீது புதிய புதிய நோய் கிருமி தாக்கங்கள் அதிகரிப்பு. நெல் மரக்கறி வகைகளின் விலைகளில் ஏற்படும் தளம்பல் நிலை. இளம் தலைமுறை விவசாயிகளின் முதிர்ச்சி அற்ற தன்மை அதாவது காலத்துக்கு ஏற்ப பயிரிடும் தன்மையற்ற நிலை. கால நிலை மாற்றங்கள் என்பன விவசாயப் பாதையின் வீழ்ச்சிக்கு கூறக்கூடிய காரணங்களாக உள்ளன. அரசாங்கம் காடுகளை அழித்து விவசாயம் மேற்கொள்ள சொல்லி அறிவித்தல் விடுத்த பொழுதிலும் குறிப்பாக வவுனியா. கிளிநொச்சி. முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் காடுகளை அழித்து நிலங்களை பண்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ள விவசாயிகள் முயற்சித்த பொழுதிலும் வன இலாகாவினர் தடுத்து நிறுத்துவதுடன் சட்ட நடவடிக்கைகளும் முன்எடுக்கின்றனர் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். 2019 க்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட இரசாயன உர இறக்குமதி தடையில் விவசாயத்துறை மிகவும் பாதிக்கப்பட்டதுடன் பல விவசாயிகள் விவசாயத்தை விட்டு விலகி சென்றுள்ளனர். 2021 க்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட வரலாறு காணாத பொருளாதார நெடுக்கடியால் அனைத்து துறைகளும் மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன் விவசாயத்துறையும் மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன் மரக்கறி அரிசி உட்பட பல பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அவல நிலை காணப்படுகின்றது.



விவசாயத்துறையுடன் பரவலாக மேற்கொள்ளப்படும் விலங்கு வேளாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேய்ச்சல் தரைப் பிரச்சனையில் பல பண்ணையாளர்கள் தமது விலங்கு வேளாண்மையை விட்டு விலகிச் சென்றுள்ளனர். இதனால் எமது நாட்டில் தன்னிறைவாக காணப்பட்ட முட்டை கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அவல நிலை காணப்படுகின்றது. இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தேயிலையில் கூட வீழ்ச்சி நிலை காணப்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியில் ஆசியக் கண்டத்தில் தவிர்க்க முடியாத நாடாக காணப்பட்ட இலங்கை இன்று தேயிலை ஏற்றுமதிக்கு தேவையற்ற நாடாக காணப்பட்டுள்ளது. இதற்கு காரணம் அண்மையில் தரமற்ற தேயிலை ஏற்றுமதியின் எதிரொலியே. இந் நிலைக்கு காரணமாக கூறப்படுகின்றது.

அத்துடன் இந்தியா. பிரேசில். சுவிடன் போன்ற நாடுகளில் தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியின் அதிகரிப்பும் இலங்கை தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது. அடுத்து இன்னுமோர் ஏற்றுமதி பொருளான தெங்கு உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. தென்னையில் ஏற்பட்டுள்ள நோய் தாக்கம் தெங்கு உற்பத்தியை பாதித்துள்ளது. அண்மையில் வட பகுதியில் தென்னையை தாக்கும் வெட்டு ஈ அதிகரித்துள்ளதாகவும் இது தென்னையை கூடுதலாக தொடர்ந்தும் தாக்கும் தன்மையால் தென்னை மரங்கள் அழிந்து போகும் நிலை ஏற்படும் என வட மாகாண விவசாயத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் விவசாயத்துறையின் இன்றைய நிலையானது வீழ்ச்சியின் பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றது. என்பது நிதர்சனமான உண்மையே விவசாயத்துறையை வீழ்ச்சியின் பாதையில் இருந்து மீட்டெடுக்க அனைவரும் முன்வருவதுடன் விவசாயத்தை காப்பதே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவருவதற்கு ஏதுவான ஓர் வழியாகும். அனைவரும் முன்வருவார்களா?

**தமிழ் கிறுக்கன்**

# துருக்கியின் புதிய வியூகம்

விமானம் தாங்கி கப்பல் .ந்த உலகத்திலேயே ஒரு பவர் புல்லான இராணுவத்திற்கு உதாரணம் என்ன என்றால் இந்த விமானம் தாங்கி கப்பல் தான். ஒரு விமானம் தாங்கி கப்பல் இருந்தால் போதும் எதிரி நாட்டை இலகுவாக தாக்க முடியும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இந்த விமானம் தாங்கி கப்பலில் இருந்து என்டயர் ரிப்ரன்டா துருக்கி ஒரு விமானம் தாங்கி கப்பலை அறிமுகம் செய்திருக்கின்றார்கள். அவ்வாறு அறிமுகம் செய்தது மட்டுமல்லாது அந்த விமானம் தாங்கி கப்பலில் சில புரோடடைப் என்பது நிறுத்தி



வைக்கப்படுகின்றது. அந்த புரோடடைப்பை உண்ணிப்பாக கவனிப்பவர்களுக்கு தெரியும் இதுதான்டா எதிர்காலம் என்று. துருக்கியின் விமானம் தாங்கி கப்பலும் இந்த புரோடடைப்பும் இதுக்கு பின்னால் **F35** துருக்கி இந்த யுத்தமும் அதில் ரஷ்யா நடத்திய சில பல உத்திகளும் இங்கு பகீரப்படப்போகின்றது. இந்த உலகத்தில் இப்போதைக்கு ஒரு ரோனினுடைய பவர் கவுஸ் **(Power houes)** யார் என்றால் அது துருக்கி தான். ஒரு வருடத்தில் துருக்கியில் ரோன் ஏற்றுமதி செய்து மட்டும் உருவாக்கக்கூடிய தொகை கிட்டத்தட்ட 871 மில்லியன் அமெரிக்க டொலர். 2021 ஐ விட 2022 இல் 80 வீதம் வளர்ச்சியடைந்திருக்கின்றது இவர்களின் எக்ஸ்போர்ட் ரிவ்னியு **(Export Review )** இதற்கெல்லாம் ஒரே ஒரு காரணம் **BAYKAR** என்னும் நிறுவனம். ரோன்களை உற்பத்தி செய்து அதை உலக நாடுகளுக்கு போட்டியா காண்பிப்பதில் **BAYKAR** க்கு நிகர் **BAYKAR** தான். **BAYKAR** ரினுடைய பேராக்டர் **TB2** என்ற ரோன் தான் தற்பொழுது உலகத்தில் வன் ஒப் த வெஸ்ட் ரோன் **(one of the West Rhone)** என்று சொல்லலாம். இந்த பேராக்டர் **TB2** என்பது உக்ரைன் ரஷ்யா போரில் மட்டும் கிடையாது **AZERBAIJAN, ARMENIA** இந்த யுத்தத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. உண்மையில் மிக முக்கியமான வரலாறு இந்த **AZERBAIJAN, ARMENIA** வரலாறு. இதை **NAGORNO - KARBAKH** வரலாறு என்று சொல்லலாம். அங்கிருந்து ரோனினுடைய ஆதிக்கம் என்பது உலக நாடுகள் பார்க்கின்றார்கள். வரும் காலத்தில் ரோன் தான் எல்லா இடங்களிலுமே ஆக்கிரமிப்பு செய்யப் போகின்றது என்பதனை எல்லாருமே உணர ஆரம்பிக்கின்றார்கள். அதன் பின்னர் தான் குட்டி ரக ரோன் பெரிய ரக ரோன் என உருவாக்குகின்றார்கள். சுவாம்ஸ் ரோன் என்ற ஒரு கான்சப்ட் உள்ளே வருகின்றது. இந்த மாதிரி சுவாம்ஸ் ரோன்ஸ் எல்லாம் வந்ததன் பின்னர் அடுத்ததாக ரோனை உற்பத்தி செய்பவர்கள் என்ன யோசிப்பார்கள் அதாவது ரோன் வந்து விட்டது பெரிய ரக ரோன் வந்துவிட்டது சுவாம்ஸ் ரோன் வந்து விட்டது அடுத்ததாக அவர்கள் யோசிக்கக்கூடியது பைட்டர் ஜெட் நமக்கு தெரியும். ஒரு ரோன் பைட்டர் ஜெட்டாக இருந்தால் "ரோன் பைட்டர் ஜெட்டா" இது எல்லாம் கனவுல தானே சாத்தியப்படும் என்றால் கிடையாது அங்கு தான் துருக்கி அவர்களது முக்கியமான கண்டுபிடிப்பை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்துகின்றார்கள்.

2023 ஏப்ரல் 10 ஆம் திகதியில் துருக்கி அவர்களது ஏர் கிராப்ட் காரியர் என்பதனை அறிமுகப்படுத்துகின்றார்கள். ஆனால் அதுவொரு நோர்மல் ஏர் கிராப்ட் கரியரா என்று பார்த்தால் அது நோர்மல் ஏர் கிராப்ட் கரியர் தான் ஆனால் அதுகூடவே அன் மான்ட் கொன்பாக்ட் ஏரியல் ஏர் கிராப்ட் யூசியல் ஏரியல் என்று சொல்லுவோம் ரோன்ஸ் அதனுடைய காரியரா அறிமுகப்படுத்துகின்றார்கள். இந்த ஏர் கிராப்ட் கரியருக்கு அவர்கள் வைத்த பெயர் **TCG Anadolu. TCG Anadolu** என்ற இந்த அன் மான்ட் ஏரியல் வேக்கிலினுடைய காரியர் ரோன் காரியர் உலகத்திலேயே முதன் முறையாக ரோன் காரியரை உருவாக்கியிருக்கின்றார்கள் என்றால் அது துருக்கி தான். இந்த **TCG Anadolu** என்ற ஏர் கிராப்ட் காரியரை துருக்கிக்கு கொடுப்பதற்கு முன்னர் சொல்லுகின்றார்கள் இந்த உலகமே வியந்து இதை பார்க்கப்போகின்றது. இந்த உலகத்தில் ஒரு ஏர் கிராப்ட் காரியர் செய்த முதல் நாடு நாங்கள் தான் இந்த ஏர் கிராப்ட் காரியரில் இருந்து ரோன்களை பறக்க வைக்கவும் முடியும். பறந்துகொண்டிருக்கின்ற ரோன் லான்டாகவும் முடியும் என்ற முக்கியமான அறிவிப்பை கொடுக்கின்றார். என்ன தான் பெரிய வித்தியாசம் இருக்கப் போகின்றது. அதில் பைட்டிங் ஏர் கிராப்ட் அல்லது ஒரு பைலட் வந்து ஏரோபிலேனை தூக்கிட்டு போகப்போகின்றார் ஒரு பைட்டர் ஜெட்டை விமானி ஓட்டிட்டு போகப்போகின்றார் இதில் சாதாரணமாக ஆளில்லா விமானங்கள் தரையிறக்கப்படுகின்றன. இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால் நாம் பார்த்துட்டுவற்ற வார் பேர் யுத்தம் அல்லது நெக்ஸ்ட் ஜெனரைசன் வார்பேர் என்றதில் இந்த அன் மான்ட் ஏரியல் வேக்கில் ஏர் கிராப்ட் காரியர் என்பது மிக முக்கிய பேசு பொருளாக மாறப்போகின்றது. அன் மான்ட் ஏரியல் வேக்கில் ஏர் கிராப்ட் காரியர் என்று சொல்லுகின்ற இந்த காரியர்ல நிறைய ரோன்ஸை நிறுத்தமுடியும் என்று சொன்னோம் தானே ஆனால் ஏப்ரல் 10 ஆம் திகதி துருக்கி அறிமுகப்படுத்திய அவர்களது அன் மான்ட் ஏரியல் வேக்கில் ஏர் கிராப் காரியர்ல அவர்கள் நிறுத்திவைத்திருந்தது பேராக்டர் **TB3** யினுடைய புரோடோடைட் தான். இதை நெக்ஸ்ட் ஜெனரைசன் ரோன் என்று சொல்லலாம். இந்த நெக்ஸ்ட் ஜெனரைசன் ரோன் 2024 இல் தான் துருக்கி ஒரு முழு புரோடைக்டாக அறிமுகப்படுத்தப்போகின்றார்கள். அதற்கு முன்னர் சீரியல் புரடக்சன்ல இந்த **TB3** என்பது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது அவர்கள் உருவாக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் ஒரு வருடத்தில் உலகத்தில் எல்லா நாடுகளுக்குமே **TB3** என்பது ஏற்றுமதி செய்யப்படும். யார் யார் கேட்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் ஏற்றுமதி செய்வோம் என்று கூறியிருக்கின்றார்கள். அப்படி என்றால் இதற்கு முன்னர் இருக்கக்கூடிய பேராக்டர் **TB2** என்ற அந்த ரோன்ஸ் கிட்டத்தட்ட 25 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. 400 - 600 ரோன்ஸை உருவாக்கியிருக்கின்றார்கள் **BAYKAR** என்ற நிறுவனம்.

**TCG Anadolu** வை நாங்கள் பார்த்துட்டோம் **TB3** என்ற ஒரு ரோன் தான் அதில் புரோடோடைப்பாக வைக்கப்பட்டிருப்பதை பார்த்தோம் ஆனால் அது என்ன பைட்டர் ஜெட் ரோன். பைட்டர் ஜெட் ரோன் வடிவில் வரப்போகுதா என்று கேட்டால் ஆமாம் அதையும் துருக்கி அறிமுகப்படுத்தியிருக்கிறாங்க. அதனுடைய பெயர் தான் வேராக்டர் கிசிலென்மா என்பது. வேராக்டர் கிசிலென்மா என்ற இந்த அன் மான்ட் பைட்டர் ஜெட் என்பது தான் தற்பொழுது பெரும் பேசும் பொருளாக மாறிக்கொண்டிருக்கின்றது. இந்த கிசிலென்மா என்ற அன் மான்ட் பைட்டர் ஜெட் கூட **TB3** என்ற ரோனும் பறக்க ஆரம்பிக்கும். எனவே **TB3** என்ற ரோனும் கிசிலென்மா என்ற அன் மான்ட் பைட்டர் ஜெட்டும் சுவாம்ஸ் ரோனாக ஆக்ட்டாகும் இது எல்லாமே ஒரே நெட் வேர்க்கா ஒரே டார்கெட்டை அழிப்பதற்கு புறப்பட்டு செல்லும் இப்பொழுது 100 ரோன்ஸை அனுப்புரோம் அதனோடு பைட்டர் ஜெட்டுக்காக கிசிலென்மா என்பதை அனுப்பிவைப்பார்கள். 5 பைட்டர் ஜெட் இருந்தால் அந்த 5 பைட்டர் ஜெட்டும் இந்த 100 **TB3** ரோன்சும் ஒரே டார்கெட்டை நோக்கி போகும் இந்த ஒரே டார்கெட்டில் இருக்கும் 99 ரோன்சை நாங்கள் அழித்தாலும் 100 வது ரோன் அந்த டார்கெட்டில் போய் நிற்கும். அப்படியில்லையா 50 ரோனை நாங்கள் அழிக்கப்போகின்றோம் என்றால் அந்த 50 ரோனும் மீதம் இருக்கும் 50 ரோனும் அவர்களது பொசிசனை மாற்றி வேறு விதமான அட்டாக் வேறு விதமான பாட்டன் எல்லாம் செய்து எதிரிகளை நிலைகுலைய செய்ய வைப்பார்கள்.

இது ஏதோ கேட்பதற்கு ஆர்டிபிசலான படத்தை பார்த்தது போன்று இருக்கலாம். ஆனால் இவை எல்லாம் நடக்கப்போகின்ற உண்மைகள். இந்த கிசிலென்மா என்ற இந்த அன் மான்ட் பைட்டர் ஜெட் பிப்த் ஜென்ரைசன் பைட்டர் ஜெட்டாக இருக்கப்போகின்றது என்று சொல்லுகின்றார்கள். **F35** பறப்பதை விட சூப்பரா இது பறக்கும் என்று சொல்லுகின்றார்கள். இது ஒரு ரோன் தானேடா இந்த பைட்டர் ஜெட்டை வைத்து **F35** ஓடு சண்டைக்கு போக முடியுமா என்று பார்த்தால் முடியும். இந்த இடத்தில் இந்த ரோனை ஓட்டுவதற்கு ஒரு பைலட் போதும் ஆனால் அந்த பைலட் இந்த ரோனில் உட்கார வேண்டாம் அதனால் தான் அன் மார்ட் பைலட் ஜெட் என்று சொன்னோம். அந்த பைலட் கீழே இருக்கக்கூடிய ஒரு ஸ்டேசனில் இருந்து அவர் ஒரு யௌஸ்சிக்கை மட்டும் அசைத்துக்கொண்டிருந்தால் போதும். அவருடைய பேசில் ஒரு ஏசு கிளாஸ் இருக்கும். அந்த ஏசு கிளாசில் ஒரு பைட்டர் ஜெட்டை ஓட்டக்கூடிய பைலட்டுக்கு என்ன என்ன விசயங்கள் தெரியுமோ அத்தனை விசயங்களும் தெரியும். அதே போன்று மானுவரிங் எல்லாமே செய்யலாம். எனவே இதனுடைய அளவு, வேகம், என்னவாக இருக்கும் என்ற சந்தேகம் இப்பொழுது உங்களது மனதில் வந்திருக்கும். இந்த கிசிலென்மாவை ரெட் ஆப்பிள் என்ற கோட் வேர்ட்டில் அழைக்கின்றார்கள். எனவே ரெட் ஆப்பிள் என்று சொல்லப்படுகின்ற கிசிலென்மா அன் மார்ட் பைட்டர் ஜெட் என்பது **Close Air Support (CAS)** செய்யக்கூடிய ஒரு பைட்டர் ஜெட்டாக இருக்கும். அப்படி இல்லையென்றால் **Suppression of Enemy Air Defenes (SEAD)** காக இதை பயன்படுத்தலாம். **Destruction of Enemy Air Defenses (DEAD)** என்ற ஒரு வேலை செய்யப்படுவதற்கு இந்த பைட்டர் ஜெட்டை பயன்படுத்தலாம். **F35** அமெரிக்காவின் லொக்கின் மார்ட் மட்டும் உருவாக்கக்கூடிய **F35** விமானமும் இந்த **(SEAD)** மற்றும் **(DEAD)** என்பதனை செய்யும் அது இல்லாமல் **Strategic Attacks** ஆ இருக்கட்டும். **Close Air Support** ஆ இருக்கட்டும். **Air Superiority** ஆ இருக்கட்டும். **ISR** ஆ இருக்கட்டும். **Electronic Warfare** இருக்கட்டும் இதையெல்லாம் செய்ய முடியும். இந்த கிசிலென்மாவினுடைய அடுத்த வேர்சன் **F35** ஐ மிஞ்சக் கூடிய எல்லா வேலைகளையும் செய்யும் என்று சொல்லுகின்றார்கள். மானுவரிங் எல்லாமே ரொம்ப பக்காவா செய்யும் என்று சொல்லுகின்றார்கள் அதே போன்று ஒரு ஸ்டெல்த்தா இருக்கும் என்றும் சொல்லுறாங்கள். ஸ்ரெல்த் என்றால் ராடார் சிக்னல் ரொம்ப ரொம்ப கம்மியா இருக்கும். சொல்லப்போனால் ராடர்ல சிக்காது சரி அப்பிடின்னா இந்த கிசிலென்மா என்பது எவ்வளது நிறை இருக்கும் என்றால் கிட்டத்தட்ட இதனுடைய டேக்காப் நிறை மட்டுமே **6 TON** இருக்கும் அதில் இருக்கும் பேலவ்ட் மட்டுமே (1500) 1.5 **TON** அளவு பேல் இதனால் சுமந்து செல்லமுடியும் என்று சொல்லுகின்றார்கள் இது மணி நேரத்திற்கு 800 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும். **Mach** 0.64 என்பது தான் இதனது வேகமாக இருக்கப்போகின்றது. இதைத்தவிர இதன் நீளம் மட்டுமே 48 அடியாகவும் ரிங்ஸ்பான் என்பது 32 அடியாகவும் இருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது. இதனுடைய ஆல்டிடிவ்ட் 35 ஆயிரம் அடி உயரத்தில் இது பறக்கும் திறன் இருக்கும் என்றும் ரேன்ஸ் மட்டுமே 500 ஆர்ட்டிக்கல் மைல் தூரம் அளவிற்கு இது பறக்கும் திறன் கொண்டது என்றும் சொல்லுறாங்கள். கிட்டத்தட்ட 5 - 8 மணி நேரம் இது விடாமல் பறக்கும் இதனுடைய இன்கான்ஸ் வேர்சன் இதைவிட கூடுதலாக பறக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்றும் சொல்லுறாங்கள். இதை ஒரு உழவு விமானமாகவும் நாம் பயன்படுத்தலாம். கிசிலென்மாவை சாட்டிலைட் வழியாக கண்ரோல் பன்னமுடியுமா என்றால் அதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றது. இது சாட்கோ ஆன்டனாவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது என்றும் சொல்லுறாங்கள் அதே போன்று இதனுடைய இஞ்சின் ஒரு ஜெட் இஞ்சின் தான் இதை தயாரித்தது உக்ரைனினுடைய நிறுவனம் அந்த இஞ்சின் எது என்றால் **A32 2F** என்ற டர்பபோ இஞ்சின் தான். இந்த கிசிலென்மாவில் **ASA** டாடர் இருக்கு அது இல்லாமல் இதனால் தூக்கி செல்லக்கூடிய பேர்லோடு வோஸ் டோர்கன் கோக் டோர்கன் மற்றும் அது இல்லாமல் கைலட்பாம் இது இல்லாமல் இது எலக்ரோனிக் பார்பேர்க்கும் பயன்படுத்தப்படலாம் என்றும் சொல்லப்படுகின்றது. எனவே இந்தளவிற்கு ரொம்பவும் அட்வான்ஸ்டான ஒரு அன் மார்ட் பைட்டர் ஜெட் என்பதும் இப்பொழுது துருக்கியால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய ரோன்ஸ் ஏர் கிராப்ட் கரியர்ல வைக்கமுடியும். எனவே அன் மார்ன்ட் பைட்டல் ஜெட் அன் மார்ன்ட் **TB3** வேராக்டர் ரோன் இது இல்லாம இதை தாங்கி செல்லக்கூடிய ஒரு ஏர் கிராப்ட் கரியர் துருக்கியினது இந்த வளர்ச்சி எப்படி இருக்கின்றது.

இதே மாதிரி ரோன் பவர் கௌஸ்ஸா பல நாடுகளும் மாற நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் துருக்கி அதில் ஒரு படி மேலே இருக்கின்றது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. கிசிலென்மா என்பது துருக்கியினுடைய ஒரு புரடக்டாக இருந்தால் இதே போன்று அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் எதுவுமே செய்யவில்லையா. அன் மான்ட் பைட்டர் ஜெட்டை அவர்கள் உருவாக்கவில்லையா என்று கேட்டால் அவர்களும் உருவாக்கியிருக்கின்றார்கள். அமெரிக்காவினுடைய கிரட்டோஸ் **XQ-58A** ஆக இருக்கட்டும். ரஷ்யாவினுடைய சுகோய் **S-70** ஒகோட்டாக இருக்கட்டும் இது எல்லாமே அன் மான்ட் பைட்டர் ஜெட் தான். நாம் பார்க்கக்கூடிய உலகம் இன்னும் ஓரிரு வருடங்களில் எப்படி மாறப்போகின்றது என்று பாருங்கள். இவை எல்லாமே 2025 இல் நம்ம தலையின் மேல் பறக்கப்போகின்றது என்பதை நம்மலால் யோசித்துக்கூட பார்க்க முடியவில்லை. இதை வேறு யாரோ ஒருவர் 200 கிலோமீற்றர் தூரத்தில் தள்ளியிருந்து கேம் விளையாடுகின்றது போன்று இதை ஓப்ரேட் பன்னப்போகின்றார்கள் என்பதும் அதன் வழியாக பேலவ்ட் போட்டு ஒரு நாட்டையே அழித்துவிடலாம் என்பதும் மிகவும் விசித்திரமான உண்மை தான். ஆனால் விஞ்ஞானத்தில் இது எல்லாமே சாத்தியம் தான்.

# உலக வலம்

## தாய்லாந்தில் தகவல்தொழில்நுட்ப துறை வேலைவாய்ப்புகள் – மோசடி

போலி நிறுவனங்கள் தாய்லாந்தில் தகவல் தொழில்நுட்ப துறைகளில் வேலைவாய்ப்பு என தெரிவித்து இலங்கையர்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என தாய்லாந்திற்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது. இவ்வாறான போலி நிறுவனங்கள் இலங்கையர்களை தாய்லாந்து எல்லை ஊடாக மியன்மார் போன்ற நாடுகளிற்கு கொண்டு சென்று அடிமையாக வைத்திருந்த கடுமையான சூழ்நிலைகளில் வைத்திருந்து வேலை வாங்குகின்றன என தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மியன்மாரிற்குள் கொண்டு செல்லப்பட்ட இலங்கையர்கள் சில சட்டவிரோதமாக நுழைந்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றுலா விசாவை தொழில் விசாவாக மாற்றி தருவோம் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே இவர்கள் தாய்லாந்திற்கு அழைத்து வரப்பட்டார்கள் ஆனால் அது இடம்பெறவில்லை என தெரிவித்துள்ள தூதரகம் இலங்கையர்களை இவ்வாறான போலி வேலைவாய்ப்புகளை நம்பவேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## உலக பணக்கார நகரங்களின் பட்டியலில் முதலிடம் நியூயோர்க்

உலக பணக்கார நகரங்களின் பட்டியலை குளோபல் வெல்த் டிராக்கர் ஹென்லி அண்ட் பார்ட்னர் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் முதலிடத்தை பிடித்துள்ளது. இங்கு 3 லட்சத்து 40 ஆயிரம் மில்லினியர்கள் வசிப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்தாண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.



2-வது இடத்தில் ஜப்பானின் டோக்கியோ நகரம் உள்ளது. இங்கு 2 லட்சத்து 90 ஆயிரத்து 300 மில்லினியர்கள் வசிக்கிறார்கள். 3-வது இடம் சான்பிரான்சிஸ்கோ நகருக்கு கிடைத்துள்ளது. இங்கு 2 லட்சத்து 85 ஆயிரம் மில்லினியர்கள் வசிப்பதாக தெரிய வந்துள்ளது.

உலக நாடுகளில் உள்ள மொத்தம் 97 நகரங்கள் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளன. ஆப்பிரிக்கா. அவுஸ்திரேலியா. ஐரோப்பியா உள்ளிட்ட நாடுகளின் நகரங்கள் இடம் பிடித்து இருக்கின்றன. அதிகபட்சமாக அமெரிக்காவைச் சேர்ந்த நியூயோர்க். லோஸ் ஏஞ்சல்ஸ். சிகாகோ. தி பே ஏரியா ஆகிய 4 நகரங்களும். அடுத்ததாக சீனாவின் பீஜிங். சாங்காய் ஆகிய நகரங்களும் இடம்பிடித்துள்ளன. இந்த பணக்கார நகரங்களின் பட்டியலில் இந்தியாவும் இடம்பிடித்துள்ளது. மும்பை. டெல்லி. பெங்களூரு. ஐதராபாத் ஆகிய 4 நகரங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## 500 நாள்கள் குகையில் வாழ்ந்த பெண்!

ஸ்பெயினைச் சேர்ந்த உடற்பயிற்சியாளர் பீட்ரிஸ் ஃப்ளாமினி. கொரோனா தொற்று காரணமாக உலகமே வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த போது. இவர் தனியாக ஒரு குகைக்குள் வாழ வேண்டும் என்று முடிவெடுத்தார். இவரது எண்ணத்தை அறிந்த ஆராய்ச்சியாளர்கள். வெளியுலகத் தொடர்பின்றி ஒரு மனிதரால் வாழ முடியுமா? அப்படி வாழும் போது மன நிலையில் ஏற்படும் மாற்றங்கள் என்ன என்பதை எல்லாம் அறிந்து கொள்ள முடிவெடுத்தனர். 48 வயது ஃப்ளாமினி ஸ்பெயினில் கிரானடா பகுதியில் உள்ள குகைக்குச் சென்றார். 70 மீற்றர் (230 அடி) ஆழமுள்ள குகைக்குள் 2021 நவம்பர் மாதம் நுழைந்தார். குகையின் வாயிலுக்கு வேலி போடப்பட்டது. 500 நாள்களுக்குப் பிறகு 2023 ஏப்ரலில் ஃப்ளாமினி வெளியே வந்த போது. பெருந்தொற்று காலம் முடிந்து உலகம் இயல்பு நிலைக்குத் திரும்பியது இவருக்குத் தெரியாது. ரஷ்யா - உக்ரைனை ஆக்கிரமித்தது தெரியாது. இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் மறைந்ததும் தெரியாது. இவருக்கு 50 வயதானதும் கூடத் தெரியாது. கடந்த 500 நாள்களில் வெளி உலகில் என்ன நடந்தது என்று எதுவும் தெரியாது. ஃப்ளாமினி மனிதர்கள் யாரிடமும் தொடர்பில் இருக்கவில்லை. ஆனால் உளவியலாளர்கள். விஞ்ஞானிகள் குழுவினரால் கண்காணிக்கப்பட்டார்.

வெளியுலகத்துக்கு வந்த போது. வெளிச்சத்தைக் கண்டு அவரது கண்கள் கூசின. அதனால் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டார். உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்பட்டார். "சூரிய வெளிச்சம் இல்லாத குகை. உள்ளே சென்ற சில வாரங்கள் வரை நாள்களை எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு விட்டுவிட்டேன். விளக்கின் வெளிச்சத்தில் படித்தேன். கம்பளி நூலால் தொப்பிகளைத் தைத்தேன். ஓவியம் தீட்டினேன். உடற்பயிற்சி செய்தேன். எனக்கு நானே பேசிக்கொண்டேன். ஈக்கள். சிறிய பூச்சிகளைத் தவிர. இந்தக் குகையில் பெரிய பிரச்சினை எதுவும் இல்லை. குறைவான உணவே எடுத்துக்கொண்டேன். ஒரு நாளைக்கு 2 லீற்றர் தண்ணீர் குடித்தேன். 160. 170 நாள்கள் குகைக்குள் இருந்திருப்பேன் என்று நினைத்தேன். ஆனால். 500 நாள்கள் குகைக்குள் இருந்தேன் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. உலகத் தொடர்பு இன்றி. தனிமையில் இருந்த அனுபவம் அற்புதமானது" என்று தெரிவித்தார் ஃப்ளாமினி.

500 நாள்களில் 60 புத்தகங்களைப் படித்திருக்கிறார். 1000 லீற்றர் தண்ணீரைக் குடித்திருக்கிறார். ஃப்ளாமினி 500 நாள்கள் முழுவதுமாகத் தனிமைப்படுத்தப் பட்டதை ஒரு சாதனையாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மிக முக்கியமாக. அவரது தனிப்பட்ட அனுபவங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் விலைமதிப்பற்றதாக இருக்கும் என்று எண்ணுகிறார்கள்.



# விளையாட்டு

## சன்ரைசர்ஸை இலகுவாக வென்றது சென்னை

இரண்டாவது தொடர்ச்சியான நாளாக குறைந்த ஓட்டங்கள் பெறப்பட்ட ஐபிஎல் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 7 விக்கெட்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றிகொண்டது.

சென்னை சேப்பாக்கம், எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் வெள்ளிக்கிழமை (21) நடைபெற்ற இப் போட்டியில் ரவிந்த்ர ஜடேஜா, இலங்கை வீரர்களான மஹீஷ் தீக்ஷன, மதீஷ பத்திரண ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுக்கள், டெவன் கொன்வேயின் அதிரடி அரைச் சதம் என்பன சென்னை சுப்பர் கிங்ஸின் வெற்றியை இலகுவாக்கின.

வேகப்பந்து வீச்சாளர்களில் குறிப்பாக மதீஷ பத்திரண மிக சிறப்பாக பந்துவீசியாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம். எஸ். தோனியும் மஹீஷ் தீக்ஷன தனது ஆற்றலை நுட்பத் திறனுடன் வெளிப்படுத்துவதாக பயிற்றுநர் ஸ்டீவன் ப்ளெமிங்கும் போட்டி முடிவில் பாராட்டினர்.

பெரும் சிரமத்திற்கு மத்தியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு எவரும் பிரகாசிக்கவில்லை. அபிஷேக் ஷர்மா (36), ராகுல் திரிபதி (21) ஆகிய இருவரே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

சுப்பர் கிங்ஸ் பந்துவீச்சில் ரவிந்த்ர ஜடேஜா 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மதீஷ பத்திரண 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் மஹீஷ் தீக்ஷன 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அவர்கள் மூவரும் தங்களது 4 ஓவர்களையும் வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் நிதானத்துடன் அதேவேளை அவசியமான வேளைகளில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 18.4 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

டெவன் கொன்வே 57 பந்துகளில் 12 பவுண்டறிகள், ஒரு சிக்ஸ் உட்பட 77 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார். ருத்துராஜ் கய்க்வாட் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

அவர்கள் இருவரும் முதலாவது விக்கெட்டில் 11 ஓவர்களில் 87 ஓட்டங்களைப் பகிர்ந்து ஸ்திரமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்ததன் பலனாக சென்னை சுப்பர் கிங்ஸ் இலகுவாக வெற்றிபெற்றது. பந்துவீச்சில் மயான்க் மார்க்கண்டே 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

## மகனின் அறிமுக போட்டி குறித்து சச்சின் நெகிழ்ச்சி!

ஐபிஎல் போட்டியில் நடந்த போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் மும்பை இந்தியன்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியில் அறிமுகமான தனது மகன் அர்ஜூனுக்கு சச்சின் டெண்டுல்கர் சில அறிவுரைகளை வழங்கினார். 23 வயதான அர்ஜீன், ஒரு ஆல்-ரவுண்டர், தனது முதல் ஐபிஎல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக பந்து வீசிய அவர், இரண்டு ஓவர்களை வீசினார். விக்கெட் ஏதும் எடுக்கவில்லை என்றாலும், இரண்டு ஓவர்களை வீசி 17 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்தார்.

இந்நிலையில் சச்சின் டெண்டுல்கர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:- அர்ஜீன், ஞாயிற்றுக்கிழமை ஒரு கிரிக்கெட் வீரராக உங்களின் பயணத்தில் இன்னொரு முக்கியமான படியை எடுத்துள்ளீர்கள். உங்கள் தந்தையாக, உங்களை நேசிக்கும் மற்றும் விளையாட்டின் மீது ஆர்வமுள்ள ஒருவராக, விளையாட்டுக்கு உரிய மரியாதையை நீங்கள் தொடர்ந்து அளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

விளையாட்டு உங்களை மீண்டும் நேசிக்கும். நீங்கள் இங்கு வருவதற்கு மிகவும் கடினமாக உழைத்துள்ளீர்கள். நீங்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவீர்கள் என்று நான் நம்புகிறேன். இது ஒரு அழகான பயணத்தின் தொடக்கமாகும். ஆல் தி பெஸ்ட்!" என்று அந்த டுவிட்டில் சச்சின் நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார்.

ஐபிஎல்லின் 15 ஆண்டுகால வரலாற்றில், அணியில் இடம்பெற்ற முதல் தந்தை - மகன் ஜோடி என்கிற சிறப்பை சச்சின் - அர்ஜூன் பெற்றனர். டெண்டுல்கர் 2008 முதல் 2013 வரை மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஆறு ஆண்டுகள் விளையாடினார். ஐந்து முறை ஐபிஎல் சாம்பியனான மும்பை அணியில் அர்ஜீன் முதல் முறையாக 2021 ஏலத்தின் போது அவரது அடிப்படை விலையான ரூ.20 லட்சத்தில் தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.















# வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கி வரும்
தினப்புயல் வாராந்த பத்திரிகைக்கு
உதவி ஆசிரியர் மற்றும்
பக்க வடிவமைப்பாளர்கள் தேவை

விண்ணப்பிப்போர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன்
பதவியையும் குறிப்பிட்டு அனுப்பவும்
thinappuyal2014@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு : 077 6906182 , 077 8195947

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 23.04.2023 அன்று வெளியிடப்பட்டது.